Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

உங்கள் மண்ணில் எங்கள் சேவை




412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 தை 22 சனிக்கிழமை (05.02.2011) பக்கங்கள் 12 ஓசை – 128


# சட்டத்தை மதிக்கும் சமூகம் வேண்டும்

# அபிவிருத்திக்கு ஒழுக்கம் மிக அவசியம்

## சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி பேச்சு

(கொழும்பு)

சட்டத்தை மதிக்கும் சமூகத்தை உருவாக்குதற்கு நாம் உறுதிபூண்டுள்ளோம். ஒழுக்கத்திற்கு மதிப்பளிப்பது அபிவிருத்திக்கு அவசியமாகும். மக்களிடம் பிரபல்யமாகும் தீர்மானங்கள் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. அசௌகரியமான, கடினமான தீர்மானங்களும் நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியம். (11 ஆம் பக்கம் பார்க்க)



## வெளிநாட்டுக் கைக்குண்டு; களுத்துறையில் ஒருவர் கைது

(கொழும்பு)

களுத்துறை அலுத்கம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மகூர் மாவத்தை தர்கா நகர் பகுதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றுடன் அதே பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அலுத்கம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே நேற்று 4.55 (12ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமத்தில் நிகழ்ந்த கோலாகல விழா; இலங்கையின் 63ஆவது சுதந்திர தினம்

### பல்லாயிரக் கணக்கில் மக்கள் அணிதிரண்டனர்


(கொழும்பு)

இலங்கைத் திருநாட்டின் அறுபத்துமூன்றாவது சுதந்திர தினம் வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமம் பகுதியில் மிகவும் கோலாகலமாக அனுஷ்டிக்கப பட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற இவ் விழாவில், பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு நிகழ்வுகளில் பங்கு கொண்டனர்.

நேற்றைய சுதந்திர தின விழாவை முன்னிட்டு பண்பாட்டு நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் கலை நிகழ்வுகள் என்று பல்வேறு அம்சங்களையும் கொண்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சுதந்திர தினம் யாழில் 12 கைதிகள் விடுதலை



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 63ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு, யாழ்.சிறைச்சாலையில் இருந்த 12 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இக்கைதிகளில் மூன்று பெண்களும், ஒன்பது ஆண்களும் அடங்கலாக 12 கைதிகள் நேற்றுக் காலை யாழ்.சிறைச்சாலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து விடுதலை செய்யப் பட்டனர். யாழ்.சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் காமினி பண்டார, சிறைச்சாலை நலன்புரி நிலைய உத்தியோகத்தர் வி.சுசிதரன் ஆகியோரின் தலைமையில் (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டிலும் சுதந்திர தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 63ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று யாழ்.மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது. யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் அரச திணைக் களங்கள், இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்களில் நேற்றுக் காலை 8.50 மணியளவில் தேசியக் கொடி ஏற்றலுடன், இவ நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகள் (11ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலிகொப்ரரில் பிரசவம் தாயும், சேயும் நலமுடன்

(கொழும்பு)

ஹொரவப்பொத்தன பகுதியில் வெள்ளத்திலிருந்து காப்பற்றப் பட்ட ஒரு கர்ப்பிணி- இலங்கை விமானப் படையின் 212 ரக ஹெலிகொப்டரில் நேற்று வெள்ளிக்கிழமை குழந்தையொன்றை பிரசவித்துள்ளதாக விமானப்படை அறிவித்துள்ளது.

தற்போது தாயும் சேயும் அநுராதபுர பொது வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டு நலமுடன் இருப்பதாக விமானப் படைப் பேச்சாளர் குறூப் கப்டன் வின் கொமாண்டர் ஜனக நாணயகார தெரிவித்தார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அகப்பட்டுள்ளவர்களைக் காப்பாற்றுவதிலும், நிவாரணம் வழங்குவதிலும் விமானப் படையின் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விலகிச் செல்லும் கடற்படை; மூளாய் முகாமுக்கு மூடுவிழா

(யாழ்ப்பாணம்)

மூளாய்ப் பகுதியில் நிலை கொண்டிருந்த கடற்படையினர் அங்கிருந்து அகன்று திருவடி நிலைப் பகுதிக்குச் சென்று புதிய முகாம் ஒன்றை அமைத்து அங்கு நிலைகொண்டுள்ளனர்.

கடந்த 15 வருடங்களாக மூளாய் அரசடிச் சந்தியில் முகாமிட்டிருந்த கடற்படையினர் கடந்த வியாழக்கிழமை அங்கிருந்து முற்றாக விலகிச் சென்றுள்ளனர்.

இராணுவப் பொருள்கள் மற்றும் இரும்புக் கேடயங்கள் என்பனவற் (12ஆம் பக்கம் பார்க்க)

## ‘சர்வதேச அரசியல், பொருளாதார போக்கிற்கு நாம் பலியாகிவிட்டோம்’



(கொழும்பு)

நாங்கள் பிராந்திய, சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதாரப் போக்குகளுக்குப் பலிக்கடாவாகிவிட்டோம். எங்கள் மக்களின் சமூகவியல், கலாசார மற்றும் பொருளாதார சுதந்திரம் எமக்கு முழுமையாக கிடைக்கவில்லை. இவ்வாறு குருணாகலை மறைமாவட்ட ஓய்வுபெற்ற ஆயர் அதி வணக்கத் திற்குரிய குமார இலங்கசிங்க இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பெறுமதிமிக்க, பயனுள்ள ஒரு பிரதேசத்தின் உரிமையாளர்கள் தாங்கள் என வடக்குக் கிழக்கு பிரதேசமக்கள் தயக்கமின்றி உணரும் நிலை தோன்ற வேண்டும். இந் நாட்டில் அமைதியுடனும், சுதந்திரமாகவும் வாழும் வகையில் முழுமையான நடமாடும் சுதந்திரமும், கருத்துச் சுதந்திரமும் அம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். இச் செய்தியில், “சுதந்திரம் விலை பேசமுடியாத (11ஆம் பக்கம் பார்க்க)

# விடாது பொழியும் அடைமழையினால் வவுனியாவில் ௬௦ஆயிரம் பேர் பாதிப்பு



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நான்கு நாட்கள் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழையினால் நேற்றுவரை 16 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 60ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.எம். சாள்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்-

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கென 40 நலன்புரி நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இதில் வவுனியா தெற்கு தமிழ் பிரிவில் மட்டும் 30 நலன்புரி நிலையங்கள் திறக்கப்பட்டு மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குப் பிரதேச செயலகங்களினால் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றது. வவுனியா மற்றும் செட்டிக்குளம் பகுதியிலுள்ள கால்நடைகளும் கடும் குளிர் மற்றும் உணவு இல்லாததால் இறந்துள்ளன.

இதைவிட, செட்டிகுளம் பகுதியிலுள்ள சண்முகபுரம் கந்தசுவாமி நகரில் 250 மக்கள் முற்றாக இடம்பெயர்ந்துள்ளனர்.

மெனிக்பாம் மீள்குடியேற்றக் கிராமத்திலுள்ள மக்களும் வெள்ள அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்து செட்டிகுளம் கலாசார மண்டபத்தில் தங்கியுள்ளனர்.

வவுனியா, தாண்டிக்குளம், திருநாவற்குளம், பூந்தோட்டம், ஸ்ரீநகர், பண்டாரிக்குளம், நெடுங்குளம், பட்டகாடு போன்ற தாழ்வான பகுதிகள் அனைத்தும் வெள்ளத்தில் முற்றாக மூழ்கியுள்ளதுடன், இப்பிரதேச மக்களும் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் அருகிலுள்ள பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவிலுள்ள குளங்கள் எல்லாம் அபாயகரமான நிலையில் காணப்படுகின்றன. குளங்களின் நீர்மட்டம் மணிக்கு மணி உயர்ந்துகொண்டிருக்கின்றது. குளக்கட்டுக்களை பாதுகாப்புப் படையினர், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், கமக்கார அமைப்புக்கள் கண்காணித்து வருகின்றனர். பொதுவாக வவுனியாப பிரதேசம் முழுவதும் வெள்ளக காடாகக் காணப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (39)

# வடமராட்சிப் பகுதியில் கடும் காற்று கடலில் நடந்த விபத்தில் இருவர் காயம்

(வடமராட்சி)

வடமராட்சிக் கடற்பரப்பில் பலத்த காற்றும் கடல் கொந்தளிப்பும் காணப்படுவதால் கரையோரப் பகுதி மக்கள் கடும் குளிர்தாக்கத்திற்கு உள்ளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கடற்பரப்பில் ஒரு வாரத்திற்கு மேலாக வழமைக்கு மாறாக கடும் காற்றும் கடல் கொந்தளிப்பும் காணப்படுவதால் அப்பகுதி மீனவர்களின் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிகப்படுகிறது.

இவ்வாறான அசாதாரண நிலையில் கடலுக்குச் சென்றவர்கள் காயமடைந்த நிலையில் கரைக்கு வந்துள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது.

இதில் பொலிகண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த இ.சகாநிக்ஷன் (வயது-42), மருதங்கேணியைச் சேர்ந்த அ.எடிசன் (வயது-50) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் கரைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

## திரைப்படத் திறனாய்வு

நகரை சுற்றி தொழிலில் ஈடுபடும் சேரி வாழ் மக்களின் வாழ்வியல் அவலங்களை சித்தரிக்கும் 'உப்பு' என்னும் திரைப்படத்தின் திறனாய்வுப் பார்வையும், நல்ல படங்களை அறிமுகம் செய்வதை நோக்கமாகக்கொண்டு திரைப்படத் திறனாய்வு கலந்தாலோசனை நிகழ்வும் இன்று 3 மணிக்கு யாழ். மறைக் கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது. (52)


## யாழ்ப்பாணம் மாநகர சபை

**சந்தைக்குத்தகை அறவீடு தொடர்பான பொது அறிவித்தல்**

**மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் சகல சந்தைகளினுள்ளும் விற்பனைக்காகக் கொண்டுவரப்படும் சகல விற்பனைப் பொருட்களின் பெறுமதியின் 4% வீதத்தினை 01.01.2011 முதல் குத்தகைப் பணமாகச் செலுத்த வேண்டுமென மாநகர சபை தீர்மானித்துள்ளது.**

**மேற்படி தீர்மானத்தினை அனைவரும் ஏற்று அதனை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.**

**திருமதி யோ.பற்குணராஜா,**
**மாநகர முதல்வர்,**
**யாழ்ப்பாணம்.**

(C/426)



## மாணவ மணிகளே!

- எங்கே உங்கள் ஆக்கத்திறன்களை வெளிக்காட்டுங்கள்.
- உங்கள் பாடசாலை பற்றியும், நீங்கள் வாழும் சூழல் பற்றிய ஆக்கங்களுக்கு கௌரவமும், பரிசில்களும் காத்திருக்கின்றன.
- இன்றே உங்கள் ஆக்கங்களை அதிபரின் உறுதியுரையுடன் அனுப்பி வையுங்கள்

கல்வி முரசு,
ஆசிரியர், தினமுரசு,
373 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



## கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## இறால் தொழிலுக்கான அனுமதி

எமது சமாச எல்லைக்குட்பட்ட ஆனையிறவு, சுண்டிக்குளம், காஞ்சிபுரம், பேப்பாறைப்பிட்டி வரையான கடல்நீரேரிப் பகுதிகளில் நடப்பாண்டிற்கான இறால் தொழில் சம்பந்தமாக கடந்த ஜனவரி 7ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத் தீர்மானத்துக்கு அமைவாகக் கடந்த காலங்களைப் போன்று இறால்கூடு கட்டுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதி பரீட்சார்த்தமாக இறால் கூடு கட்டப்பட்டு •21.02.2011 அன்றைய தினம் பரிசீலனை செய்யப்பட்டு பொதுச்சபைத் தீர்மானத்திற்கமைவாக இறால்கூடு கட்டுவதற்கான திகதி உத்தியோகபூர்வமாகச் சமாசத்தினால் அறியத்தரப்படும். இதனைக் கருத்திற்கொண்டு எமது சமாச எல்லைக்குட்பட்ட இணைச் சங்கங்களான 7 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இந்த விடயத்தில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கித் தவறுகள் இடம்பெறாவண்ணம் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

இதற்கமைய அனுமதிக்கப்படும் திகதியின் பின்னர் ஏற்றுமதியாளர்கள் மற்றும் கொள்வனவு முகவர்கள் தங்களுக்கான உரிய அனுமதிகளைப் பெறும் பொருட்டு எதிர்வரும் மார்ச் 10ஆம், 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் முல்லை, பரந்தன் வீதி, புளிம்பொக்கணைச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள மேற்படி சமாச அலுவலகத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

☆ மோட்டார் சைக்கிள், [illegible] விச்சக்கர வண்டி, குளிரூட்டி வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்களி[illegible] தொழிலில் ஈடுபடுவோர் அனைவரும் கடந்த 2010 ஆம் ஆண்டின் அனுமதியுடனும் அனுமதியின்றியும் ஏற்றுமதியினை மேற்கொண்டு சமாச சங்க வளர்ச்சிக்கு நிதி செலுத்தத் தவறியவர்கள் அனைவரும் தங்களது நிலுவைகளினைச் சீர்செய்து சிட்டைகளினைப் பெற்றுக்கொள்ளவும்.

☆ சமாசத்தின் இந்த நடைமுறைகளை மீறிச் செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**பரந்தன்/முல்லைவீதி,**
**புளியம்பொக்கணை.**

**தலைவர்,**
**பொதுமுகாமையாளர்,**
**கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

**தொடர்புகளுக்கு:**
**0770891497,**
**0777939496**

(C/428)



## எமது சேவையை விஸ்தரிப்பதை முன்னிட்டு 15-02-2011 முதல்

10 புகைப்படங்களுக்கு மேல் பிரதியாக்கம் செய்யும் புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு

**4R - 8.50**
**10x15 - 55.00**
**10x30 - 100.00**
**CD DVD Cover - 30/= (XEROX)**
**A4 Colour paper print - 25(100 பிரதிகளுக்கு மேல்)**
**Banner- sqf 30/=**

Fuji
Paper & Chemical

குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன் அடையாள அட்டைப்படங்களை பிடித்திடவும் பனர், ஸ்ரிக்கர் மற்றும் கலர் பேப்பர்களில் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ளவும் உங்கள் இல்லங்களில் நடை பெறுகின்ற மங்களகரமான வைபவங்களை வீடியோ, புகைப்படங்களாகப்பிடித்திடவும் அவற்றை அழகுற அல்பங்களாக கட்டிப் பெற்றிடவும் யாழ் நகரின் இன்றைய முன்னணி நிறுவனம்.



மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
62/17 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**T.P 021 222 1358**

(C/429)

கொள்ளைக்காரன் பணக்காரனைக் கொள்ளையடித்து ஜீவனம் செய்கிறான் முதலாளி ஏழையைக் கொள்ளை அடித்து ஜீவனம் செய்கின்றான்

-ஷேக்ஸ்பியர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

# சிரம பரிகாரம் அவசியம்

யாழ்.குடாநாட்டில் அதிகரித்துவரும் கலாசார சீரழிவுச் சம்பவங்கள் தொடர்பாக அனைத்துத் தரப்பினரும் அடிக்கடி சுட்டிக்காட்டி வருகின்றனர்.

தமிழ் மக்கள் பண்பாட்டு விழுமியங்களை அடியொற்றியே அன்று தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள்.

எமது முன்னோர் வாழ்ந்த காலத்தில், பெற்றோர்களையும் தமது ஆசான்களையும் அன்றைய இளம் சமுதாயம் மதித்து நடந்ததைப்போல் அவர்களும் அவர்களை அரவணைத்து வந்தனர்.

இப்போது, பேசப்பட்டு வருவது போன்ற கலாசார சீரழிவுச் சம்பவங்கள் சிறியளவில் முன்னரும் இடம்பெற்றபோதும், தற்போது நடைபெற்று வருவதுபோன்று அதிகம் நடைபெறவில்லை.

அன்றைய பெற்றோர்களினதும், பாதுகாவலர்களினதும் அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகள் காரணமாக பருவ வயதை அடையும் இளைஞர், யுவதிகள் நெறி தவறாது வாழ்ந்தனர்.

முன்னர் அறிவுபூர்வமான பல பொழுதுபோக்கு அம்சங்களை நுகரக்கூடிய நிலை காணப்பட்டது. ஆனால் இன்று நாகரீகத்தின் உச்சப் பயன்பாட்டை நுகரக்கூடிய பலபொழுது போக்கு அம்சங்கள் பருவ வயதினைக் கௌவிப் பிடித்துள்ளது.

இந்நிலையில் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரின் ஆய்வுத் தகவல்கள் குடாநாட்டு மக்களைப் பெரும் அதிர்ச்சிக்கும், ஆச்சரியத்துக்கும் ஆளாக்கிவிட்டது.

கல்வித் திணைக்களங்கள், வைத்தியசாலைகள், பிரதேச செயலகங்களில் இருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்களின்படி 247 சிறுமிகள் கர்ப்பம் தரித்திருப்பதாகவும், 14 சிறுமிகள் திருமணமின்றி சேர்ந்து வாழ்வதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிட்டுக் கூறக்கூடிய அம்சமாகும்.

இவற்றுக்கெல்லாம் காரணமானவர்கள் யார்? என்பதை ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டிய தார்மீகக் கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

மூன்று தசாப்த காலமாக உள்நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்தமே இவற்றுக்குக் காரணம் என்று கூறலாம். யுத்தம் காரணமாக இடம்பெற்ற இடப்பெயர்வுகள், புதியதொரு கலப்புக்கலாசார மாற்றத்தை எம்மவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ கடைப்பிடிக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

இதன் பாதிப்புக்குள்ளானவர்களை இப்பாதிப்புக்களில் இருந்து மீட்டெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பெற்றோர்களை முழுமையாகவும், தந்தையர்களை மட்டும் இழந்த குடும்ப சிறுவர் சிறுமிகளுக்குரிய வாழ்வாதார அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்து, அவர்களது கல்வி, பொருளாதார மேம்பாடுகளுக்குரிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

முக்கியமாக கர்ப்பம் தரித்துள்ள சிறுமிகள் விடயத்தில் தீவிரமாக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிந்த வரையில் சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். இதன் மூலம் இப்பாதகச் செயல்கள் மீண்டும் மீண்டும் இடம்பெறா வண்ணம் பார்த்துக்கொள்ள முடியும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக கலாசார சீரழிவு, கலாசார சீரழிவு என்று வெறுமனே கோஷம் எழுப்பிக்கொண்டிருக்காமல் அதனை ஒழித்துக் கட்டுவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் முன் வரவேண்டும்.

-ஆசிரியர்-

# கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்காக கடந்த வருடம் 2538 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2538 மில்லியன் ரூபாவை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கடந்தவருடம் ஒதுக்கியுள்ளதாக அவ்அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி மாவட்டத்தின் 300 கிலோ மீற்றர் நீளமான வீதிகளையும், பாலங்களையும் திருத்தியமைப்பதற்காக 95 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. நீர் விநியோகத் திட்டத்தின்படி 3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு, நான்கு ஆழ் கிணறுகள் புனரமைக்கப்பட்டன.

அத்துடன் உருத்திரபுரம் கமநலசேவை நிலையங்களைப் புனரமைக்க 16 மில்லியன் ரூபாவும், கரைச்சிப் பகுதியிலுள்ள கமநல சேவைகள் நிலையைக் கட்டுமானம், இரண்டு விதைப் பண்ணைகள், ஆறு களஞ்சியங்கள் என்பன வற்றை புனரமைக்க 17 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் இதனோடிணைந்த பிற திட்டங்களுக்காக 5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

பூநகரி, கண்டாவளை மற்றும் கரைச்சி ஆகிய பிரதேசங்களில் கால்நடை மருத்துவ நிலையங்களை நிர்மாணிக்க 7.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 1383 ஹெக்டேயர் பரப்பளவில் செய்கை பண்ணப்படும் நெற்பயிர்களுக்கு நீரை வழங்கும் மாவட்டத்தின் இரண்டாவது பெரிய அக்கராயன் குள புனரமைப்பிற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதே போன்று மாவட்டத்திலுள்ள 40 சிறிய குளங்களின் புனரமைப்பிற்கு 84 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளது. 126 மேசன் மற்றும் தச்சு வேலைப் பயிற்சி மையங்களுக்காக 12 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலக கட்டடங்களின் புனரமைப்பிற்காக 27 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கரைச்சி, பூநகரி வலய கல்வித்திணைக்களம், மூன்று பாடசாலைகளின் மீள்கட்டுமானம் யுத்தத்தால் சேதமடைந்த 3484 வீடுகள் என்பவற்றை புனரமைக்க 22 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கரைச்சி மற்றும் பூநகரிப் பிரதேசத்தில் கடற்றொழில்பணி மனைகளை நிர்மாணிக்க 1.7 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 88 கிராமசேவகர் பிரிவுகளில் கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. 07 கிராமசேவகர் பிரிவுகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. 58 பிரதேசங்கள் கண்ணிவெடிகள் உள்ளவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

## பெருக்கெடுத்தது கனகராயன் ஆறு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழையினால் கனகராயன் ஆறு பெருக்கெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சின்னடம்பன், பெரிய டம்பன், விஞ்ஞானக்குளம், கரப்புக்குத்தி போன்ற பிரதேசத்தை சேர்ந்த மக்கள் ஏ - 9 பாதைக்கு வரமுடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கனகராயன் குள ஆற்றின் தொடுகை ஆறான சேமடுக்குளம், ஓமந்தைக்குளம், வவுனிக்குளம், நொச்சிக்குளம், அணைகல் போட்டகுளம், குறிசுட்டகுளம், படுகாட்டுக் குளம், பன்றிக்கெய்த குளம் போன்ற குளங்களின் அணைக்கட்டுக்களை ஆற்று நீர் மேவிப் பாய்ந்து இரணைமடுக் குளத்தைச் சென்றடைகிறது.

இதனால் நேற்றுமுன்தினம் (03.02.2011) கனகராயன் மகாவித்தியாலய மாணவர்கள் இடைநேரத்துடன் தங்களது பிரதேசங்களுக்குப்பாதுகாப்பான முறையில் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கனகராயன் குளத்தின் நீர் மட்டம் அண்ணளவாக 3 அடிக்கு மேலாக தண்ணீர் வந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதைவிட இந்த அணைப் பெருக்கெடுப்பால் மாங்குளம் வீதியினூடாக நீர் மேவிப் பாய்வதாகவும் இதனால் ஏ - 9 போக்குவரத்து சிரமத்தின் மத்தியில் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தொடர்ச்சியாக மழை பெய்யுமானால் கனகராயன் குளத்தின் நீர் மட்டம் உயரலாம் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (12)

## சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள் சீருடை அணிவது கட்டாயமானது

(யாழ்ப்பாணம்)

சுகாதார திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்களின் பணியாளர்கள் சீருடை அணிந்து கடமையாற்றுவது கட்டாயம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஏ.எம்.எல் பொலகஸ்வத்த தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு அவர் சுற்று நிருப மொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதன்படி சுகாதாரத்திணைக் களத்தின் கீழ் உள்ள சில நிறுவனங்களின் பணியாளர்கள் சீருடையின்றி கடமையாற்றி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் நிறுவனங்களின் பணியாளர்கள் சீருடை அணிந்து கடமை செய்தல் ஏற்கனவே கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்நடைமுறையே தற்போது உள்ளது. எனவே சீருடை அணியாது கடமையாற்றும் பணியாளர்கள் குறித்து தமக்கு ஒரு வாரத்திற்குள் தெரியப்படுத்தும்படி சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகளை அவர் இச் சுற்று நிருபம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார். (பா)

## சுன்னாகம் மயிலணிப்பகுதியில் தீயில் கருகினார் மூதாட்டி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணிப் பகுதியில் 83 வயதான பெண்மணி ஒருவர் தீயில் எரிந்து மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு 10 மணிமுதல் 12 மணிவரைக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கிட்டப்பா பரமேஸ்வரி என்பவரே உயிரிழந்தவர் ஆவர்.

குறித்த மூதாட்டி தனது பிள்ளைகளின் வீட்டில் தனியான அறையொன்றில் வாழ்ந்து வந் ததாகவும், அன்றைய தினம் மகள் குறித்த நேர இடைவெளியில் தொலைபேசி அழைப்புக்கு பதிலளித்துவிட்டு, வந்தபோது தாயார் தீயில் எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்து உடனடியாகச் சத்தமிட்டு அயலவரைக் கூப்பிட்டு மோட்டர் மற்றும் கிணற்றிலிருந்து தண்ணீர் ஊற்றியும் காப்பாற்ற முடியாது போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து மல்லாகம் மாவட்ட நீதிவான எஸ்.தம்பிமுத்து சம்பவ இடத்துக்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவரின் உத்தரவை அடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வெள்ளத்தில் மூழ்கிய தம்பனைக்குளம் கிராமம்

(தம்பனை)

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் உள்ள மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தம்பனைக்குளம் கிராமத்தினுள் ஆற்று நீர் பெருக்கெடுத்துள்ளமையினால் அக்கிராமத்தைச் சேர்ந்த 16 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக மன்னார் அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் இணைப்பாளர் றியாஸ் தெரிவித்தார்.

தென்பகுதியில் பெய்துவரும் கடும்மழை காரணமாக வெள்ள நீர் அருவியாற்றின் மூலமாக ஆற்றில் கலந்து தாழ்வான நிலப்பரப்புகளை நோக்கிப் பெருக்கெடுக்க ஆரம்பித்துள்ளது.

இதன் காரணமாகவே தம்பனைக்குளம் கிராமத்தில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது. இதன் காரணமாக 16 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் இடம்பெயர்ந்து அருகில் உள்ள பாடசாலையிலும், உறவினர் வீடுகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## மகா கும்பாபிஷேகம்

கிளிநொச்சி - குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி முற்பகல் 9.13 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் அடியார்கள் எண்ணெய்க் காப்புச்சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கிரியைகள் யாவும் சிவஸ்ரீ பாலகிருஸ்ணகுமாரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் தொடர்ந்து 24 தினங்கள் மண்டலாபி ஷேகமும் இடம் பெறவுள்ளது. (11)

# கிராமப்புற பாடசாலைகளின் கல்வியை முன்னேற்ற பெற்றோர்கள் முழுமனத்துடன் செயலாற்ற வேண்டும்

## மூத்த ஆசிரியர் க.இளையகுட்டி தெரிவிப்பு

(அச்சுவேலி)

நகர்ப்புறப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளும் கல்வி கற்று உயர்ச்சியடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காக பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு அதிகளவு பணத்தைச் செலவு செய்து வரும் பெற்றோர்கள், கிராமத்துப் பாடசாலைகளில் கற்கும் தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கத் தவறுவதனால், கிராமத்துப் பாடசாலைகளின் பெறுபேறுகள் தாழ் மட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்படுகின்றது என்று மூத்த ஆசிரியரும், கவிஞருமாகிய புத்தூர் வே.இளையகுட்டி தெரிவித்தார்.

சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற தரம் 01 மாணவர்களின் புகுமுக வரவேற்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்-

கிராமத்துப் பாடசாலைகளின் முன்னேற்றம் என்பது அதிபர், ஆசிரியர்களின் கைளில் மட்டும் தங்கியிருப்பதில்லை. பாடசாலை நிர்வாகத்துடன் பெற்றோர்களும் முழுமனதுடன் செயற்பட்டு மாணவர்களின் கற்றலுக்கான அனைத்து வசதிகளையும் செய்துகொடுத்து கண்காணித்து வருவார்களாயின் கிராமத்துப் பாடசாலைகளின் பெறுபேறுகளையும் அதிகரிக்க முடியும் என்பது வெளிப்படையான உண்மை.

ஆனால் இதை உணராத பல பெற்றோர்கள் தமது தவறுகளை மறைப்பதற்காக பாடசாலைகள் மீது நியாயமற்ற முறையில் குறைகாண முனைவது அடியோடு நிறுத்தப்படவேண்டும். பெற்றோர்கள் யதார்த்தத்தை உணர்ந்து, ஆழமாய்ச் சிந்தித்து அர்த்தமுள்ள செயற்பாடுகளில் இறங்கவேண்டும்.

கல்விச் செயற்பாடுகளில் பாடசாலைகளின் பங்கை எவரும் நிராகரிக்க முடியாது. ஒவ்வொரு குடிமகனும் தன் தாயையும், தாய் மண்ணையும் எவ்வளவிற்கு மதிப்பளித்துக் காக்க வேண்டுமோ, அந்தளவிற்கு தான் பிறந்த கிராமத்துப் பள்ளிகளையும் கட்டிக்காக்க முன்வர வேண்டும். நகரத்துப் பாடசாலைகளில் கற்கின்ற பிள்ளைகள் மட்டும் தான் கல்விமான்களாக வருகின்றார்கள் என்று நினைப்பது மகா தவறு.

இன்று கல்வி உலகில் ஒளிவிளககாய் திகழ்கின்ற பேரறிஞர்கள் பலர் கிராமங்களில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் தான் என்பதை எளிதில் மறந்துவிட முடியாது. எனவே கல்வியில் கிராமம், நகரம் என்ற பாகுபாட்டை மறந்து பிள்ளைகளுக்குச் சம வாய்ப்புகளை வழங்கி அவர்களின் கற்றலை ஊக்குவிக்க வேண்டியது பெற்றோர்கள் அனைவரதும் கடமையாகும் என்றார். (03)

# சமாதான விழிப்புணர்வு கருத்தரங்குகள்

(கொக்குவில்)

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான வன்முறையற்ற தொடர்பாடல், சமாதானக்கல்வி மற்றும் சமாதானக் கட்டுமானம் ஆகிய கருத்தரங்குச் செயற்பாடுகளை சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் மேற்கொண்டு வருகிறது.

அத்தொடரில் இவ்வாரம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை தரம் 5 மாணவர்களுக்கு சமாதானக்கல்வி சம்பந்தமாகவும், ஆசிரியர்களுக்கு சமாதானக்கட்டுமானம் சம்பந்தமாகவும் இரு கரத்தரங்குகள் நடைபெற இருக்கின்றன.

மேலும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நல்லூர் தெற்கு, ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கு வன்முறையற்ற தொடர்பாடல் பற்றிய கருத்தரங்கும் நடைபெறுமென பணியக இணைப்பாளர் செல்வி நிரஞ்சினி கஸ்மீர் புஸ்பராசா தெரிவித்தார். (68)

# தபால் மூல வாக்களிப்பு மார்ச் முதல் வாரத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தபால் மூல வாக்களிப்புக்கு 6 ஆயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. அதற்கான தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பம் ஏற்கும் கால எல்லை கடந்த 31 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. நாடளாவிய ரீதியில் இத்தேர்தலில் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் வரையிலான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவ் உள்ளூராட்சித் தேர்தலின் தபால் மூலவாக்களிப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (பா)

# பாவனையாளர் விசனம்

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கின் அநேக பகுதிகளில் பகல் மற்றும் இரவு வேளைகளில் எவ்வித முன்னறிவித்தலுமின்றி அடிக்கடி குறுகிய நேர மின்வெட்டு இடம் பெற்று வருகின்றமையால் பவனையாளர்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

இவ்வாறான முன்னறிவித்தலின்றிய மின்வெட்டினால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அச்சுவேலிப் பகுதியில் சில மின்மார்க்கங்களில் பகல் வேளைகளில் மின்சாரம் கூடிக்குறைந்து வருவதனால் மின்உபகரணங்களைப் பாவிக்க முடியாது இருப்பதாகவும் அவர்கள் மேலும் ஆதங்கத்துடன் தெரிவிக்கின்றனர். (03)

# நிர்வாகசபைக் கூட்டம்

இளவாலை வடமேற்கு ஜே/222 கிராம சேவகர் பிரிவிலுள்ள வசந்தபுரம் கிராமத்திலுள்ள பாரதி சனசமூக நிலையம், வசந்த முருகன் ஆலய பரிபாலன சபை, விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கான புதிய நிர்வாக சபைக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு பாரதி நூலக முன்றலில் நடைபெறவுள்ளது.

பாரதி சனமூக நிலையத்தின் செயலாளரும், பதில் தலைவருமான க.சுதாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். எனவே இக்கூட்டத்திற்கு வசந்தபுரம் கிராம மக்கள் அனைவரையும் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு சனசமூக நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# வவுனியா மாறா இலுப்பை பிரதேச மக்கள் பெருமழையினால் இடம்பெயர்ந்துள்ளனர்

(நெல்லியடி)

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கன மழையால் வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மாறா இலுப்பைப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அப்பகுதியிலுள்ள பொத்தல் குளத்தின் அணைக்கட்டு உடைந்தமையால் நீர் பாய்ந்து அப்பிரதேசம் முழுவதும் வெள்ளக்காடாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்களை மாறா இலுப்பை மகா வித்தியாலயத்தில் வந்து தங்குமாறு நெடுங்கேணிப் பிரதேச செயலர் அப்பகுதி மக்களிடம் தெரிவித்துள்ளார்.

இதனால் அப்பகுதி மக்கள் பாதுகாப்புக் காரணமாக குறித்த பாடசாலையில் தங்கியுள்ளதாகவும், குறித்த பிரதேசத்திலிருந்து புளியங்குளம், நெடுங்கேணி ஊடாக முல்லைத்தீவு செல்லும் வீதியும் வெள்ளத்தினால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதைவிட குறித்த பிரதேசத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீடுகளே காணப்படுவதாகவும் வெள்ளத்தினால் இந்த வீடுகளும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெல் அறுவடைக்கு இன்னும் 10 நாட்களே உள்ள நிலையில் தற்போது பெய்து வரும் அடை மழையினால் முற்றிய நெல் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (12)

# பஸ்சேவை இன்றி வீடு திரும்பும் மணியந்தோட்ட மாணவர்கள்

(கொக்குவில்)

மணியம் தோட்டம் பகுதியில் சமீபத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் காலையில் பாடசாலைகளுக்குச் செல்லவும், பாடசாலைமுடிந்து வீடுகளுக்குத் திரும்பவும் பஸ் சேவைகள் இன்றி பாடசாலை செல்லாமல் திரும்ப நேர்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதிகளில் குடியமர்ந்த மாணவர்களின் கல்வித் தரம் குன்றி வருவதாகவும் பெற்றோர் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்து சென்றிருந்த இடங்களில் பெற்றுக்கொண்ட கல்வித் தராதரத்தை மீட்டல் செய்வதற்கு மின்வசதிகள் மணியந்தோட்டம் வரை இதுவரை விஸ்தரித்து வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் மேலும் கூறினர்.

அதேநேரம் வாழ்வாதார வசதிகளும் இன்னமும் சீர்செய்து வழங்கப்படவில்லை. கழிவறைகள், குடிநீர் விநியோகம் என்பனவும் மேற்கொள்ளப்படாததால் மாணவர்கள், வயோதிபர், நோயாளர் எனப்பல தரப்பினரும் சொல்லொணா அசௌகரியங்களுடன் வாழ நேர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (68)



இலங்கையின் 63 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று நாடுமுழுவதும் நடைபெற்றது.

இந்நிகழ்வு யாழ்.செயலகத்தில் நடைபெற்றபோது, தேசியக் கொடியை யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஏற்றுதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் முதலிரு படங்களிலும், யாழ்.மாநகர சபையில் நடைபெற்ற நிகழ்வில் தேசியக் கொடியை யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஏற்றுவதையும், மாநகர சபைக் கொடியை துணை முதல்வர் துரைராஜா இளங்கோ (றீகன்) ஏற்றுவதையும் அடுத்த இருபடங்களிலும் காணலாம். (பா)


# கண்ணிவெடி அகற்றப்பட்ட வலிகாமத்தில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதியில் மேலும் பல பிரதேசங்கள் மிதிவெடி அகற்றப்பட்டு மீள் குடியமர்வுக்குத் தயாராகவுள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

ஜே/150 மாதகல் கிழக்கு, ஜே/154 மாரீசன்கூடல், ஜே/150 இளவாலை, ஜே/44 காரைநகர் தெற்கு, ஜே/45 காரைநகர் தெற்கு மேற்கு, ஜே/228 தெல்லிப்பளை, ஜே/238 கட்டுவன், ஜே/239 கட்டுவன் மேற்கு, ஜே/242 குரும்பசிட்டி, ஜே/243 குரும்பசிட்டி கிழக்கு, ஜே/244 வசாவிளான் கிழக்கு, ஜே/208 புன்னாலைக்கட்டுவன், ஜே/287 அச்சுவேலி மேற்கு, ஜே/283 இடைக்காடு, ஜே/281 பத்தமேனி, ஜே/284 வளலாய் ஆகிய பிரிவுகளிலேயே மிதிவெடியகற்றப்பட்டு, யாழ். செயலக மதிவெடி



செயற்பாட்டு அலுவலகத்தினால் அதற்கான சான்றிதழ் யாழ். அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் மக்களை மீள்குடியமர்த்தும் நோக்கில் இதன் விபரங்கள் யாழ் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஊடாகப் பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்,

இந்தப் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்தப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் மக்கள் விரைவாக மீளக்குடியமர்த்தப் படுவர் என அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# சிறப்பாக நடைபெற்று முடிந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

(நெடுந்தீவு)

யாழ் நெடுந்தீவு சீக்கிரியான் பள்ளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இந்த வருடத்திற்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வு நேற்று முன் தினம் பிற்பகல் 2.00 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் மிகவும் சிறப்புற நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) பிரதம விருந்தினராகவும், நெடுந்தீவுப் பொறுப்பாளர் ராயல் ரெட்சிகன் சிறப்பு விருந்தினராகவும், நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரி க.அரசரட்ணம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மேலும் நெடுந்தீவுப் பங்குத்தந்தை அமல்ராஜ் மற்றும் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் முதலானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (பா)

# மருதங்கேணி வைத்தியசாலைக்கு புதிதாக விடுதி அமைக்கத் திட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி பிராந்திய வைத்திய சாலைக்கு விடுதி அமைக்க வடக்கின் துரித மீள்எழுச்சித் திட்டத்தின கீழ் 2 1/2 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்த இவ்விடுதியைப் புனரமைக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் இதற்கான நிதியினை ஒதுக்கியுள்ளது. இதைவிட மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 4 கிளைச் சங்கங்களும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கென 1 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (100)

# அறுவடைக்குத் தயாராகும் "ஆட்டக்காரி"

(மண்டைதீவு)

மண்டைதீவில் சுமார் 51 எக்கரில் செய்கைபண்ணப்பட்ட "ஆட்டக்காரி" நெல் அறுவடைக்குத்தயாராகி இருப்பதாக அப்பகுதி விவசாயிகள் சங்கத்தின் பிரதிநிதி பொ.சபாநாயகம் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தகவல் தருகையில்,

1991 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் மண்டைதீவில் நெல்விதைத்ததுபாதி விதைக்காதது பாதியாக விட்டுவிட்டு இடம் பெயர்ந்து சென்று மீளக்குடியமர்ந்தபின் அப்பகுதி விவசாயிகளால் விதைக்கப்பட்ட இந்நெல்லே அறுவடைக்குத் தயாராகி வருவதாகவும் இதில் அமோக விளைச்சல்களை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் வேறு இடங்களிலும் கிளிநொச்சிப்பகுதியிலும் இந்த ஆட்டக்காரி நெல் இனம் "சந்துக்குத்தி" புழுநோய்த்தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள போதும் மண்டைதீவு நெல் வயல்கள் எந்தவிதமான நோய்த்தாககத்திற்கும் உள்ளாகவில்லை என்று தெரிவிக்கப்படுகறுது. (23)

# மகா சிவராத்திரிக்கான உயர்மட்டக் குழுக்கூட்டம்

(மன்னார்)

எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ள மகா சிவராத்திரியை முன்னிட்டு அதற்கான ஒழுங்குகள் தொடர்பான உயர்மட்டக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முற்பகல் மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சகல அரச திணைக்களங்களின் தலைவர்கள், பொலிஸ், இராணுவ உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது, மகாசிவராத்திரிக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப் பட்டது.

போக்குவரத்து, சுற்றுப் புறச்சூழல், குடிநீர், சுகாதாரம், தொலைத்தொடர்பு மற்றும் பாதுகாப்பு என்பனவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று விசேட தீர்மானம் எடுக்கப்பட்டது.

இம்முறை மகாசிவராத்திரிக்காக திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு பல இலட்சக் கணக்கான அடியார்கள் வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இரண்டு பாடசாலைகள் புனரமைப்பு

(வடமராட்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட 2 பாடசாலைகள் 11.16 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதில் முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 5.59 மில்லியன் ரூபாவும், சிலாவத்தை பாடசாலைக்கு 5.57 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்விரு பாடசாலைகளே இத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (100)



கடந்த செவ்வாய்க்கிழமை காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் இடம்பெற்ற விளையாட்டுப்போட்டி நிகழ்வில் விநோத உடைப் போட்டியில் கலந்துகொண்டு காவல்துறை வீரனாக வேடமணிந்த சிறுவனையும் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் காணலாம். (50)

# பொதுச்சந்தை அமைப்பதற்கு அரசாங்கக் காணி ஒதுக்கீடு

(கரணவாய்)

கரணவாய் மண்டான் கிராமத்திலுள்ள பொதுச்சந்தையையும், நெசவாலையையும் புதிதாக அமைப்பதற்கு அமைச்சர் டகளஸ் தேவானந்தா அரச காணியில் 8 பரப்பை ஒதுக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென ஒதுக்கப்பட்ட காணிப் பத்திரம் கரவெட்டி பிரதேச செயலாளரூடாக பிரதேச சபைச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதுவரை புனரமைப்பதற்கு எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (18)

# இடைவிட்டுப் பெய்யும் மழையால் நெல் அறுவடை பாதிப்பு

(அச்சுவேலி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆங்காங்கே பெய்து வரும் மழையினால் நெல் அறுவடை நடவடிக்கைகள் பெரிதும் பாதிககப்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

நெல் அறுவடை நேரத்தில் திடீர்திடீரென மழை பொழிவதால், அறுவடைச் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாது இருப்பதுடன் வெட்டிய பின் உலர்வதற்காக வயல்களில் பரப்பிவைக்கப்பட்ட நெற்கதிர்கள் மழையில் நனைந்து வருவதாகவும் வலிகாமத்தின் சில பகுதிகளில் வெட்டியடுக்கிய நெற்கதிர்களை மழை பெய்யும் வேளைகளில் பிளாஸ்ரிக் படங்குகள் மூலம் மூடிப்பாதுகாத்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. (03)

## இன்றைய பலன்

05.02.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
விகிர்தி தை 22
இராகுகாலம் 9.35– 11.05, சுபநேரம் 3.35 –5.05,
துதியை அமிர்தம் மு.ப.11.46, சதயம் மு.இ.7.38
அறிஞர் சித்திலெப்பை நினைவு தினம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

–ஆதினி–

மேடம்:– பிறரைக் கவர்தல், சாதுரியமான பேச்சு, பரிசு பெறல்.

ரிஷபம்:– முரண்பாடு, குடும்பத்தில் சிக்கல், நண்பர் பகை.

மிதுனம் :– கடவுள் வழிபாடு, தானதர்ம விருப்பம், நிம்மதியை விரும்பல்.

கடகம்:– நற்செய்தி, உறவு வழியால் பணவரவு, மகிழ்ச்சி.

சிம்மம்:– தேக ஆரோக்கியம், நண்பர் சேர்க்கை, விருந்துணவு.

கன்னி :– கடும் முயற்சி, மனக் குழப்பம், சந்தேகம்.

துலாம் :– செய்தியால் வரவு, குடும்பக் குதூகலம், சுபச்செலவு.

விருச்சிகம்:– உயர்ந்த சிந்தனைகள், பிறர்க்குதவி, ஆன்மீக ஈடுபாடு.

தனுசு:– நண்பர் சேர்க்கை, கலைகளில் ஆர்வம், மதிப்பு உயர்வு.


மகரம்:– எதிர்பாராத பொருள் வரவு, மன மகிழ்ச்சி, குடும்ப மகிழ்ச்சி.

கும்பம் :– ஆரோக்கிய விருத்தி, தொழிலில் அதிக ஈடுபாடு, பெரியோர் ஆசி.

மீனம்:– பிறரால் விரும்பப்படல், உதவிகள் செய்தல், பயணம்.

# நாட்டுக்கான கடமையை செய்வதற்கு எதிர்க்கட்சிகள் முன்வர வேண்டும்!

## அமைச்சர் மஹிந்த அமரவீர அழைப்பு



(கொழும்பு)

இலங்கை எந்த நேரமும் அனர்த்தங்களினால் பாதிப்படையக்கூடிய மோசமான நிலையில் உள்ளது எனக் கூறிய அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர நாட்டுக்கான கடமையைச் செய்ய வாருங்கள் என எதிர்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

வெளிநாட்டு சுற்றாடல் நிபுணர்கள், இலங்கை எந்த நேரத்திலும் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்படும் அபாயம் உண்டென எச்சரித்துள்ளதாக அமைச்சர் கூறினார். எதிர்க் கட்சியினரை முகாம்களுக்குச் சென்று பார்த்து குறைபாடுகள் இருப்பின் தனக்குத் தெரிவிக்கும்படி அமரவீர தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தங்களை தவிர்க்கக் கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்படக் கூடிய பாடசாலைகளுக்கு அபாய அறிவிப்பு உபகரணங்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

70 மில்லிமீற்றருக்கு மேல் மழை பெய்யுமாயின் இந்த உபகரணம் எச்சரிக்கை சமிக்கையை வழங்கும், எனவே பிள்ளைகளை பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியும். 50 மில்லியன் ரூபா செலவில் மண்சரிவைத் தடுப்பதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் செயற்படுத்தவுள்ளது.

மழை தொடர்ச்சியாகப் பெய்தால் மரக்கறிகளின் விலைகள் மேலும் அதிகரிக்கும். தொடர்ச்சியான மழையால் 12000 வீடுகள் அழிந்துள்ளன. 10000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மட்டும் 38 மில்லியன் ரூபா நிவாரணத்துக்காக ஒதுக்கப்பட்டது. இதுவரை மொத்தமாக 289.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. உலக உணவுத் திட்டம் 500,00 அமெரிக்க டொலர் தருவதாகக் கூறியுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# நாட்டை காட்டிக்கொடுக்கமாட்டேன்



(கொழும்பு)

பணத்துக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டேன் என்று தேசிய வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் மாதாந்த சஞ்சிகையின் வெளியீட்டு விழா கொழும்பில் இடம் பெற்றது.


இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், பல் தேசியக் கம்பனி ஒன்றைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் எனக்கு லஞ்சம் தர முயன்றார். இக்கம்பனியினர் விவசாய பண்ணை நடத்துபவர்கள். மேற்சொன்ன உயரதிகாரிக்கு என்னைச் சந்திக்க வேண்டி இருந்தது. எனது நண்பர் ஒருவர் மூலமாக என்னைச் சந்திக்கப் பார்த்தார். ஆனால் இந்த கம்பனியைச் சேர்ந்தவர்கள் இனி மேல் ஒருபோதும் என்னைச் சந்திக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# கடற்படைக்கு வழங்கிய கப்பலை மீளப்பெற்றுக் கொண்டது இந்தியா

(கொழும்பு)

புலிகளுக்கு எதிரான போரில் பயன்படுத்துவதற்காக கடற்படைக்கு இந்தியா வழங்கிய 'சயுரால' என்ற போர்க் கப்பல் மீளவும் இந்திய கடலோரக் காவல்படையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு எதிரான போர் தீவிரமடைந்திருந்த கட்டத்தில் கடல் முற்றுகையைத் தீவிரப்படுத்தி கடற்புலிகளின் விநியோகங்களைத் தடுப்பதற்காக கடற்படைக்கு இந்திய கடலோரக் காவல் படை ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்றை வழங்கியிருந்தது.



'விக்ரகா' என்ற பெயருடைய இந்தப் போர்க்கப்பல் 2008ஆம் ஆண்டு கடற்படையிடம் இந்தியா ஒப்படைத்திருந்தது.

கடற்படையில் இணைக்கப்பட்ட இது திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் இருந்து கடல்முற்றுகை மற்றும் ஆழ்கடல் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டது.

கடந்த 29 மாதங்களாக கடற்படையில் 'சயுரால' என்ற பெயருடன் இணைக்கப்பட்டிருந்த இந்தப் போர்க்கப்பலே தற்போது இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்துள்ளதை அடுத்து இந்தப் போர்க்கப்பலை இந்தியா மீளப்பெற்றுள்ளது.

கடந்த மாதம் 23ஆம் திகதி கொச்சி கடற்படைத் தளத்தில் இந்தக் கப்பல் அதிகாரபூர்வமாக இந்திய கடலோரக் காவல்படையிடம் கையளிக்கப்பட்டது.

கடற்படையின் மேற்குப் பிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் தமயந்த தர்ம சிறிவர்த்தன இந்தப் போர்க் கப்பலை இந்திய கடலோரக் காவல்படையின் மேற்குப் பிராந்தியத் தளபதி பஸ்ராவிடம் கையளித்தார்.

புலிகளுக்கு எதிரான போருக்கு எந்தவிதமான ஆயுத உதவிகளையும் வழங்கவில்லை என்று இந்தியா கூறிவந்தது.

ஆனால் போர் முடிவுக்கு வந்த நிலையில் இந்தப் போர்க்கப்பலை இந்தியா மீளப் பெற்றுக் கொண்டதானது, புலிகளுக்கு எதிரான போருக்காகவே இது வழங்கப்பட்டது என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளது.

# அருவியாற்று பாலத்தின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி


(கொழும்பு)

பி 403 புத்தளம் பிரதான வீதியிலுள்ள அருவி ஆறு பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் கட்டத்தை நெருங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பால நிர்மாணிப்புப் பணிகள் நிறைவடைந்தால்,கொழும்பிற்கும், யாழ்ப்பாணத்திற்குமான பயணத்தூரம் குறைவடையுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

151.4 மில்லியன் ரூபாசெலவில் 260 மீற்றர் நீளத்தை உடையதாகவும் 7.35 மீற்றர் அகலத்தைக் கொண்டதாகவும் புனரமைக்கப்படும் இந்தப் பாலம், பொதுமக்களின் போக்குவரத்திற்காக விரைவில் திறந்து வைக்கப்படும்.

# தேசிய கீதம் தமிழில் பாடப்படுவதை எதிர்ப்பவருக்கு எதிராக நடவடிக்கை

## அமைச்சர் வாசுதேவ அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் பாடுவதைத் தடுப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்க விவகார அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அறிவித்துள்ளார்.


அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கேற்ப சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டும் அரச கரும மொழிகள் என்ற வகையில் தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடுவதில் எந்தத் தவறும் இல்லை, அதற்குத் தடையும் இல்லை.

அவரது அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

ஜாதிக ஹெல உறுமயவினர் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்கள். ஆயினும் அவர்களின் கருத்தை யாரும் பொருட்படுத்த வேண்டாம். தமிழில் தேசிய கீதம் பாடப்படுவதற்கான உரிமையை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்கின்றது.

ஒரு சில பிரதேசங்களில் சில அதிகாரிகள் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கு தடை விதிப்பதாகக் கேள்விப்படுகின்றோம். அரசாங்கத்தின் மொழிக் கொள்கையின் பிரகாரம் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# இறக்குமதியாகும் பொருட்களை உற்பத்தி செய்ய நடவடிக்கை



(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் உற்பத்தி செய்யக் கூடிய பொருட்களின் உற்பத்திக்கென 10 லட்சம் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடிந்த பொருட்களை வகைப்படுத்தி அதனை உரிய பிரிவினரிடம் ஒப்படைக்கவுள்ளதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

# வெள்ள நிவாரணம் வழங்கவில்லை கொட்டும் மழையிலும் ஆர்ப்பாட்டம்



(மட்டக்களப்பு)

வெள்ள நிவாரணம் வழங்கப்படாமையால் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோடைமேடு கிராம மக்கள் களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் காலை ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடு பட்டனர்.

மழை கொட்டிக் கொண்டு இருந்த போதிலும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. குடைகளைப் பிடித்துக் கொண்டு பல மணி நேரங்கள் போராட்டத்தை நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களில் கணிசமான தொகையினர் பெண்கள் ஆவர். இக்கிராமத்தில் 96 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் ஆனால் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் பராமுகமாக நடக்கின்றார் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டு அதிகாரி அண்ணாத்துரை கலந்துகொண்டு சிறப்பிக்கின்றார். (எஸ்)










காற்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்கு முன்னோடியான பயிற்சி வகுப்பு நேற்று முன்தினம் மாலை 2.30 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது, இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தைச் சேர்ந்த ஜீ.என் றூபேல் கால்பந்தாட்டம் குறித்து விளக்குவதையும், யாழ். கால்பந்தாட்ட லீக் செயலாளர் ற. பீரான்சீஸ், எம்.எல். கமால்தீன், எம். வடிவேல், எஸ். அன்ரனிபிள்ளை (லீக் தலைவர்), கே.ஜே. திசாநாயக்க, பருத்தித்துறை லீக் செயலாளர் வரதன், ஜீ.என். றூபேல் அமர்ந்திருப்பதையும் காணலாம். இந்த வகுப்பில் 75இற்கும் மேற்பட்ட மத்தியஸ்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## கல்லூரிகளின் டெஸ்ட்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி மற்றும் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டி வரும் ஏழாம், எட்டாம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் 19 வயதுப் பிரிவின் 'பிரிவு மூன்று'க்கான போட்டியே நடைபெறவுள்ளது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய அணிகளை இனிங்ஸால் வென்று சிறப்பான ஆட்டத் திறனுடன் யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணி இருப்பதால், ஸ்ரான்லிக் கல்லூரி அணி நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எஸ்)

# நடுவரிசையில் அனுபவ வீரர்கள் ரணதுங்க கூறும் ஆலோசனை

(கொழும்பு)



நடுவரிசையில் நல்ல அனுபவம் மிக்க வீரர்கள் களமிறக்கப்படவேண்டும். அவ்வாறு களமிறக்கப்படும் பட்சத்தில் நெருக்கடியின்றி விளையாட முடியும் என இலங்கை முன்னாள் அணித் தலைவர் ரணதுங்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கை அணி தற்போது நல்ல நிலையில்தான் இருக்கின்றது. இதில் சில துடுப்பாட்ட வரிசையில் சில மாற்றங்களைச் செய்யவேண்டும் என நான் நினைக்கின்றேன்.

முதலாம், இரண்டாம் நிலையில் களமிறங்கும் சங்கக்கார மற்றும் ஜெயவர்த்தன ஆகியோர் ஐந்தாம், ஆறாம் நிலைகளில் களமிறங்க வேண்டும்.

அவ்வாறு அந்த நிலையில் அவர்கள் களமிறங்கும் வகையில் இலங்கை அணிக்கு அது சிறப்பானதாக அமையும் என நான் எண்ணுகின்றேன்.

முதலாம், இரண்டாம் நிலைகளில் இவர்கள் களமிறங்கி, இவர்களின் விக்கெட்டுக்களும் விரைவாக இழக்கப்படும் நிலையில், பின்னால் வரும் வீரர்களுக்கு அது நெருக்கடியையே ஏற்படுத்தும் என்றார்.

## கலந்துரையாடல்

(தும்பளை)

வடமராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கான, பிரதேச செயலக விளையாட்டு விழா பற்றிய கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். வசந்தன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் இருபத்தியாறு கழகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கழகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதில் கழகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தடகளத்தை ஊக்குவித்தல், போட்டிகள் நடைபெறும் மைதானத்தைத் தீர்மானித்தல், கிரிக்கெட் மற்றும் கால்பந்தாட்டத்திற்கான நேர அட்டவணையைத் தயாரித்தல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (62)

# உலகக் கிண்ணப் போட்டி அட்டவணை வரவேற்கத்தக்கது என்கிறார் இம்ரான்


(கராச்சி)

உலகக் கிண்ணப் போட்டி அட்டவணையில் இந்த முறை ஆறு நாட்கள் இடைவெளியில் அடுத்தடுத்த போட்டியில் அணிகள் விளையாடுகின்றன. இது வரவேற்கத்தக்க ஒன்று என பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் இம்ரான்கான் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 1992இல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் விளையாட முடிவு செய்யவில்லை. பின்னர் புற்றுநோயால் பாதிக்கப்படுவோருக்கு நிதியுதவி செய்தற்காக விளையாட முடிவு செய்தேன். இதனால் உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி எனக்கு கடைசிப் போட்டியாக அமைந்தது. இதில் கிண்ணத்தை வென்று சாதித்தது என்றும் மறக்க முடியாததாக அமைந்தது.

உலகக் கிண்ணத் தொடரில், ஒவ்வொரு அணியும் சுமார் ஆறு நாட்கள் இடைவெளியில் அடுத்தடுத்த போட்டியில் விளையாடுகின்றன. இது வரவேற்கத்தக்க ஒன்று. இதன்மூலம் முன்னணி வீரர்களுக்குக் காயம் ஏற்படும் பட்சத்தில், அடுத்த போட்டிக்குள் விரைவில் குணமாகிவிடலாம். இது



வேகப்பந்துவீச்சாளர்களுக்கு நல்ல பலன் அளிக்கும். முன்னதாக நாங்கள் விளையாடிய காலகட்டத்தில், இதுபோன்ற நீண்ட ஓய்வு கிடைக்காது. இதனால் சில நேரங்களில் அதிக சிரமத்திற்கு ஆளானோம் என்றார்.

# இறுதிப் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை ஆண்கள் அணிகளுக்கிடையிலான பூப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மற்றும் உடுவில் மான்ஸ் வித்தியாலயம் தெரிவாகின. இந்த இறுதிப் போட்டி இன்று மதியம் 12.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலிகாமம் பாடசாலை அணிகளுக்கிடையில், வலிகாமம் கல்வி வலயத்தால் நடாத்தப்பட்ட பூப்பந்தாட்டத் தொடரிலேயே மேற்படி அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. மானிப்பாய் இந்துக் கல்லூரியின் உள்ளக விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டி விலகல் முறையைக் கொண்டதாக அமைந்தது.

இதில் உடுவில் மான்ஸ் வித்தியாலயம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, யூனியன் கல்லூரி, ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, அராலி சரஸ்வதி மத்திய மகாவித்தியாலயம், பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய அணிகள் பங்குகொண்டன. இதன் அரையிறுதிப் போட்டிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி, உடுவில் மான்ஸ் வித்தியாலயம், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், நவாலி மகாவித்தியாலயம் ஆகிய அணிகள் தெரிவாகின. முதலாவது அரையிறுதிப் போட்டியில் நவாலி ம.வியை எதிர்கொண்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, 21-10, 21-10 என்ற அடிப்படையிலும், 21-08, 21-01 என்ற அடிப்படையிலும் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

வசாவிளான் ம. ம.வியை எதிர்கொண்ட உடுவில் மான்ஸ் வித்தியாலயம் 23-21, 21-04 என்ற அடிப்படையிலும், 21-19, 21-06 என்ற அடிப்படையிலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இறுதிப் போட்டி இன்று மதியம் 12.00 மணிக்கு இதே மைதானத்தில் நடைபெறவுள்ளது. (எஸ்)

## பயிற்சியைத் தொடங்கினார்



(சிட்னி)

உலகக் கிண்ணப் போட்டியை முன்னிட்டு பயிற்சியைத் தொடங்கியுள்ளார் அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங். ஆஷஸ் டெஸ்ட் தொடரின் போது கைவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாக அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பொண்டிங், கடந்த சில வாரங்களாக கிரிக்கெட் விளையாடாமல் இருந்தார்.

இப்போது அவரது கைவிரல் ஓரளவு குணமடைந்துள்ளதால் உலகக் கிண்ணத் தொடர் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், மீண்டும் பயிற்சியைத் தொடங்கியுள்ளார். வலைப் பயிற்சியில் ஈடுபட்ட பொண்டிங், எடை குறைந்த பந்துகள், பிளாஸ்டிக் பந்துகளைப் பயன்படுத்தியே பயிற்சியில் ஈடுபட்டார். துடுப்பாட்டப் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கரும் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இன்று வெளிவருகிறது தீர்ப்பு



(டுபாய்)

ஸ்பொட் பிக்சிங்சில் ஈடுபட்ட பாகிஸ்தான் வீரர்களின் தீர்ப்பு டோகாவில் இன்று அறிவிக்கப்படும் என சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. ஸ்பொட் பிக்சிங்சில் ஈடுபட்ட மூன்று பாகிஸ்தான் வீரர்கள் மீதான விவகாரத்தால் ஐ.சி.சி.யின் தீர்ப்பாய விசாரணை முடிந்து விட்டது.

இதில் முன்னாள் டெஸ்ட் தலைவர் சல்மான்பட், வேகப்பந்து வீரர் முகமது ஆசிப் ஆகியோருக்கு ஆயுட்கால தடை விதிக்கப்படலாம் என்று தகவல் வெளியாகி உள்ளது. முகமது அமீருக்கு குறைவான தண்டனை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அவருக்கு 5 ஆண்டு தடை விதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

## ஹமரூன் வைட் நியமனம்

(பேர்த்)

இங்கிலாந்து அணிக்கெதிரான இறுதி ஒரு நாள் போட்டிக்கு அவுஸ்ரேலிய அணித் தலைவராக ஹமரூன் வைட் தலைவராக செயற்படவுள்ளதாக அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரை அணி 5-1 என்ற கணக்கில் அவுஸ்ரேலிய அணி கைப்பற்றிக் கொண்ட நிலையில், நாளை பேர்த்தில் நடைபெறவுள்ள கடைசி ஆட்டத்திற்கான அவுஸ்ரேலிய அணியில் மைக்கேல் கிளார்க், வட்சன் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஒரு நாள் போட்டி அணிக்கு கமரூன் வைட் முதல் முறையாகத் தலைவராகச் செயற்பட உள்ளார் என அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# அப்ரிடியே தலைவர்

(கராச்சி)

உலகக் கிண்ணப் போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் அணிக்கு அப்ரிடியே தலைவராகச் செயற்படுவார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நேற்று அறிவித்துள்ளது.

நியூசிலாந்துடனான டெஸ்ட் தொடரை மிஸ்பா உல் ஹக் தலைமையிலான அணி கைப்பற்றிக் கொண்டதன் காரணமாக, 15 பேர் கொண்ட உலகக் கிண்ண அணி வெளியிடப்பட்டிருந்தபோதும், அதன் தலைவர் யார் என்பதை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிடாமலிருந்தது. இந்நிலையில் நியூசிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை கைப்பற்றிய நிலையில், நேற்று, உலகக் கிண்ண அணியின் தலைவராகத் தொடர்ந்தும் அப்ரிடியே நீடிப்பார் என்றும் துணைத் தலைவராக மிஸ்பா உல் ஹக் செயற்படுவார் என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்தது.



# அவுஸ்ரேலியாவில் மீண்டும் மழை 30 ஆயிரம் மக்கள் இடப்பெயர்வு



(சிட்னி)

அவுஸ்ரேலியாவில் கடந்த மாதம் பலத்த மழையினால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ கின. இதில் ஏராளமானோர் உயிரிழந்தனர். ஆயிரக் கணக் கான வீடுகள் இடிந்தன. லட்சக் கணக்கானோர் பாதிக்கப் பட்டனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் வட கிழக்கு பகுதியிலுள்ள குயின்ஸ்லாந்து மாநிலத்தில் பயங்கர புயல் தாக்கியது.

யாசி என்று பெயரிடப் பட்ட இந்தப் புயல் தாக்கிய போது, 290 கிலோ மீற்றர் வேகத்தில் பயங்கர சூறைக் காற்று வீசியது. பலத்த மழை யும் கொட்டியது. இதில் பல வீடுகள் இடிந்து விழுந்தன. வீட்டின் கூரைகள் காற்றில் பறந் தன. மரங்களும், மின் கம்பங்க ளும் சரிந்து விழுந்தன.

பலத்த மழையினால் கையூன்ஸ், குள்ளி கார்ட்டுவன் ஆகிய மரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. குள்ளி நகரில் 90 சதவீத வீடுகள் சேதம் அடைந்து இருப்பதாக அதிகா ரிகள் தெரிவித்தனர். 30 ஆயிரம் பேர் வீட்டை விட்டு வெளி யேற்றப்பட்டு பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

புயல் மற்றும் வெள்ளத்தில் சிக்கி பலர் பலியாகி உள்ள னர். ஆனால் இறந்தவர்கள் பற்றி முழு விவரம் தெரிய வில்லை. மின் கம்பங்கள் சாய்ந்து விழுந்து விட்டதால் பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.




# கண்ணீர் வடிக்கும் அன்னை மரியாள்



(ஒகியோ)

அமெரிக்காவின் ஒகியோ மாநிலத்தில் எழுந்தருளி இருக் கும் புனித அன்னை மரியாள் சிலை ஒன்றிலிருந்து கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக கண்ணீர் வடிகின்றது.

ஏராளமானவர்கள் நேரில் வந்து இந்த அதிசயத்தைப் பார்த்துச் செல்கின்றனர்.

அதிசயத்தைக்காண வரு பவர்களில் சிலர் மரியாள் மீது நம்பிக்கை உடையவர்கள். சிலர் நம்பிக்கை இல்லாதவர்கள். ஆயினும் மரியாள் சிலையில் இருந்து கண்ணீர் ஒழுகுகின்றமையைப் பார்த்து மெய்சிலிர்த்துப் போய் ஆச்சரியத்தில் ஆழ்ந்துள்ளார்கள். ஒரு கண்ணீர்த் துளி அன்னையின் கன்னத்தில் துல்லியமாகத் தெரிகிறது. இன்னொரு கண்ணீர்த்துளி அன்னையின் தாடையில் துலங்குகிறது.

அற்புதம் என்று ஆராதிக்கின்றனர் பக்தர்கள். ஆனால், இது ஒரு எண்ணெய் கசிவு என்று சிலர் கூறுகின்றனர்.

# எகிப்தில் உடனடி ஆட்சிமாற்றம் தேவை வலியுறுத்துகின்றன ஐரோப்பிய நாடுகள்

(பாரிஸ்)

எகிப்து நாட்டில் உடனடி யாக ஆட்சி மாற்றம் தேவை என, ஐரோப்பிய நாடுகள் வற்புறுத்தியுள்ளன. இது குறித்து ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகள் ஒன்றாக விடுத்துள்ள அறிக் கையில் கூறியிருப்பதாவது-

எகிப்தில் பத்திரிகை யாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது கண்டனத்துக் குரியது. எகிப்து நாட்டு மக்கள் அமைதியான முறையில் பார்லிமெண்டை நடத்தும் சூழல் ஏற்பட வேண்டும். பாதுகாப்பு படையினரின் முழு ஒத்து ழைப்பு அவர்களுக்கு தேவை.

எகிப்தில் தற்போது நிலைமை தலைகீழாக உள் ளது. எனவே, அங்கு உடனடி யாக ஆட்சி மாற்றம் தேவை. இதன் மூலம் தான் தற்போது அங்கு நிலவும் பிரச்னைக்கு தீர்வு ஏற்படும். எகிப்தில் வன் முறையை தூண்டுவோரின் செயலும் கண்டனத்துக்குரி யது. இவ்வாறு ஐரோப்பிய நாடுகள் விடுத்துள்ள கூட்ட றிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பார்வையாளரைக் கவர்ந்த இரட்டைத்தலைப் பாம்பு!



(பேலஸ்)

சுவிட்ஸர்லாந்தில் உள்ள பேஸல் நகரில் இடம்பெற்ற ஒரு மிருகக் கண் காட்சியில் அனை வரினதும் கவ னத்தை ஈர்த்தது இந்த இரட்டைத் தலைப் பாம்பு தான்.

இவ்வாறு இர ண்டு தலைகள் கொண்ட பாம்புகள் உலகில் எட்டு இருப்பதாக இதன் உரிமையாளர் டொம் பெஸர் கூறினார்.


ஒரு பார்வையாளர் 13000 பவுண் கொடுத்து இந்தப் பாம்பை வாங்க முன்வந்தும் அதை விற்க பெஸர் மறுத்து விட்டார்.

இதன் உண்மையான பெறுமதி அதைவிட அதிகம் என்று அவர் கூறுகின்றார்.

# நேபாளத்தில் நடந்தேறிய தேர்தலில் லெனினிஸ்ட் கட்சித் தலைவர் வெற்றி

(காத்மண்டு)

நேபாளத்தில் நடைபெற்ற தேர்தலில் மார்க்சிஸ்ட் லெனி னிஸ்ட் கட்சித் தலைவர் ஜலநாத் ஹனால் (60) வெற்றிபெற்றுப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.



நேபாள நாட்டில் பிரதமராக இருந்த நேபாள் கடந்த ஜூன் மாதம் பதவி விலகினார். இதைத் தொடர்ந்து புதிய பிரதமர் தேர்தல் நடந்தது. 17 முறை நடந்த தேர்தலின் போதும் யாரும் பிரதமராக தேர்ந்தெடுக்கப்படவில்லை.

நேபாள நாடாளுமன்றத்தில் 601 எம்.பி.க்கள் உள்ளனர். அவர்களில் 236 எம்.பி.க்கள் ஆதரிப்பவர்தான் பிரதமராக முடியும். ஆனால், மும்முனைப் போட்டி நிலவியதால் பெரும் பான்மை கிடைக்காத தால் யாரும் தேர்ந்தெடுக்கப்பட வில்லை.

இந்த நிலையில் நேற்று 18 ஆவது முறையாக மீண்டும் பிரதமர் தேர்தல் நடந்தது. இதில், பிரதமர் பதவிக்கான வேட்பாளராக இருந்த மாவோ யிஸ்டு கட்சியின் தலைவர் புஷ்பகமல் பிரசுந்தா போட்டியில் இருந்து விலகினார்.

இதைத் தொடர்ந்து இடது சாரி ஒருங்கிணைந்த மார்க் சிஸ்ட் லெலினிஸ்ட் (யூ.எம்.எல்) கட்சித் தலைவர் ஜலநாத் ஹனால் (60) தேர்ந்தெடுக்கப் பட்டார்.

இவருக்கு, மாவோயிஸ்டு கட்சி ஆதரவு அளித்தது. புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட ஜலநாத் 368 வாக்குகள் பெற்றரீர்.


புலமைபெறும் மாணவர்களின் ஒரே முரசு..."கல்விமுரசு"

2011 ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முற்றிலும் எதிர்பார்க்கத்தக்க மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள்

கல்வி முரசு



. தேசிய ரீதியில் தொடர்ந்து முதல் இடங்களைப் பெற்ற மாணவர்கள் பயிற்சி பெற்ற முன்னோடி வினாத்தாள்களை வெளியிட்ட வெளியீட்டு நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் தேசிய ரீதியில் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்களை நெறிப்படுத்திய பாடசாலைகளில் இருந்து பெறப்படும் வினாத்தாள்களே எமது கல்வி முரசு ஊடாக வெளிவரும்.

வாரம் தோறும் எமது புலமை முரசு மாணவர்களின் கையில்......

திங்கள் — பகுதி -I (4 பக்கம்)

புதன் — பகுதி -II (4 பக்கம்)

வெள்ளி — பகுதி -I, II (விடைகளும், புள்ளியிடலும்)

எமது கல்வி முரசின் சேவைகள் அனைத்தும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ....... இலவசம்

எட்டுத் திசையும் கொட்டட்டும் கல்வி முரசு

தரம்-05 மாணவர்களுக்கான முன்னோடி பயிற்சிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாளைப் பெறவிரும்பும் பெற்றோர்கள் அருகிலுள்ள "தினமுரசு" விற்பனை முகவரிடம் முற்பதிவு செய்து உங்கள் பிரதி கிடைப்பதை உறுதிப்படுத்தவும்.

பாடசாலைகளில் ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலுடன் வெற்றிபெறும் மாணவர்களுக்கு மேலும் தங்கள் புள்ளியை உயர்த்த வீட்டில் இரவு வேளைகளில் பெற்றோரின் உதவியுடன் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்கான விசேட முன்னோடிப் பரீட்சை "கல்வி முரசு"


எம்மால் வாரம்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடாத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சி பெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சககர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள வழங்கிக் கௌரவிக்கப்படும்.




திரு.தி.சுப்பிரமணியம், பிரதம ஆசிரியர், கல்விமுரசு

தினமுரசு காரியாலயம், 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# அரசியலில் குதிப்பதற்கான அஸ்திவாரத்தை பலமாகப் போட்டு வருகிறாராம் நடிகர் விஜய்



(சென்னை)

எதிர்ப்புகள் குறித்து எவ்வித கவலையும் இல்லையெனவும், அரசியலில் குதிப்பதற்கான அஸ்திவாரத்தைப் போட்டு வருவதாகவும் நடிகர் விஜய் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் நடிகனாக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். நான் நினைத்ததை விட மிகப்பெரிய இடத்தில் மக்கள் என்னை உட்கார வைத்துள்ளனர். இது போல் இன்னொரு இடத்திலும் அதே மக்கள் என்னை அமர வைக்கிற நாள் வெகு தொலைவில் இல்லை. மற்றவர்கள் பேச்சைக் கேட்டு நான் செயற்படுவது இல்லை. அரசியலில் இறங்குவதற்கான அஸ்திவாரத்தைப் பலமாக போட்டுக் கொண்டு வருகிறேன்.

வெற்றி-தோல்வியைத் தீர்மானிப்பவர் கடவுள். சாதாரண மனிதர்களால் அதைத் தடுக்க முடியாது. நான் இது போன்று பேசுவதால் என் வீட்டில் கல் எறியப்படலாம். என்னை வழி மறித்து தாக்கவும் செய்யலாம். எந்த ஆபத்து வந்தாலும் நான் கவலைப்படமாட்டேன். காவலன் படத்துக்கு பல தடைகள் வந்தன. அதையெல்லாம் மீறி படம் வந்தது. கூட்டம் கூட்டமாக மக்கள் பார்த்தார்கள். படம் அமோக வெற்றி பெற்றுள்ளது. இவ்வாறு விஜய் கூறினார்.




# தேவாவுடனான திருமணத்திற்குப்பின் நடிக்கமாட்டேன் என்கிறார் நயன்தாரா



(ஹைதராபாத்)

பிரபுதேவாவுடனான திருமணத்திற்குப் பின்னர் சினிமாவில் நடிக்கமாட்டேன் என நடிகை நயன்தாரா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சினிமாவை விட்டு விலகும்படி பிரபுதேவா வற்புறுத்தியுள்ளார். அவர் வார்த்தைக்கு கட்டுப்பட்டு இனி நடிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளேன். திருமணத்துக்குப் பின் நடிக்க மாட்டேன். தெலுங்கில் நான் நடித்து வரும் ராமராஜ்ஜியம் படம் தான் எனது கடைசிப் படம் என்று சொல்லலாம். இந்தப் படத்தில் சீதை வேடத்தில் நடிக்கிறேன். ஒரு உத்தமி பாத்திரத்தில் நடித்து விட்டு சினிமாவுக்கு நான் முற்றுப்புள்ளி வைப்பது திருப்தியாகவுள்ளது.

என் வேடம் அற்புதமானது. திரையுலக வாழ்க்கையில் நான் நடிக்கும் இந்தச்சீதை வேடத்தை மறக்க முடியாது. மிகவும் மன நிறைவை அளித்துள்ளது. எனது அனைத்துத்திறமைகளையும் சீதை பாத்திரத்தில் வெளிப்படுத்துவேன். பத்ம பூஷன் விருது பெற்ற நாகேஸ்வரராவும் இதில் நடிப்பது இரட்டிப்பு சந்தோஷம்.

பிரபுதேவாவுக்கும், எனக்கும் தகராறு நடப்பதாக வதந்திகள் பரவியுள்ளன. எங்களுக்குள் எந்தப் பிரச்சினையும இல்லை. இது போன்ற செய்திகளை யார் பரப்புகிறார்கள் என்று புரியவில்லை. இவைகளை நான் பொருட்படுத்தவும் இல்லை. ராமராஜ்ஜியம் படம் முடிந்ததும் திருமணம் செய்து கொள்வோம். திருமணத்துக்குப் பின் நல்ல மனைவியாகவும் குடும்பப் பெண்ணாகவும் இருக்க விரும்புகிறேன்.

மலையாளத்தில் நான் நடித்த பொடி கார்ட் படம் தமிழில் காவலன் என்ற பெயரில் ரீமேக் செய்து வெளியிட்டுள்ளனர். இதில் விஜய் ஜோடியாக நடிக்க என்னைத்தான் முதலில் அழைத்தனர். நான் மறுத்து விட்டேன் எனத் தெரிவித்தார்.

## தோணியில் வருகிறது பொருட்கள்

(சென்னை)

தூத்துக்குடி - கொழும்பு இடையே தோணி மூலம் பொருட்களை அனுப்பும் பணி 13 ஆண்டுகளுக்குப் பிறகு எதிர் வரும் 9ஆம் தேதி மீண்டும் தொடங்கவுள்ளது.

தோணி எனப்படும் பாய்மர கப்பல் மூலம் தூத்துக்குடி - கொழும்பு இடையே பொருட்களை அனுப்பி வர்த்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாளடைவில் சரக்கு பெட்டகம் மூலம் இலங்கைக்கு பொருட்கள் அனுப்பப்பட்டதால், தோணி மூலம் ஏற்றுமதி செய்வது கடந்த 1998ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் தோணி உரிமையாளர்கள் கூட்டம் தூத்துக்குடியில் நடை பெறறது. தூத்துக்குடி - கொழும்பு இடையே தோணி மூலம் பொருட்களை அனுப்பும் பணி 9ஆம் திகதி மீண்டும் தொடங்கவுள்ளது என முடிவு செய்யப்பட்டது.

# இந்திய-பாகிஸ்தான் போர் நடந்தால் ஒன்றரைக்கோடி பேர் பலியாவார்கள்


(புதுடில்லி)

**அமெரிக்காவின் பல்வேறு ரகசியங்களை அமெரிக்காவில் விக்கி லீக்ஸ் இணைய தளம் வெளியிட்டு வருகிறது. இப்போது இந்தியா தொடர்பாக அமெரிக்க ராணுவ தலைமையகம் பென்டகனில் நடந்த ஆய்வு பற்றிய தகவலும் வெளியாகி உள்ளது.**

இந்தியா-பாகிஸ்தான் இடையே அணு ஆயுதப் போர் நடந்தால் என்ன பாதிப்புகள் ஏற்படும் என்று 2008ஆம் ஆண்டு பென்டகனில் ஆய்வு செய்து உள்ளனர். இரு நாட்டிலும் ஒரு கோடியே 20 லட்சம் பேர் பலியாவார்கள். இதனால் உலக அளவில் பொருளாதார பாதிப்பு ஏற்படும் என்று கணித்துள்ளனர். பென்டகன் கோப்பில் இருந்த இந்தத் தகவலை விக்கி லீக்ஸ் வெளியிட்டு உள்ளது.

அமெரிக்காவில் ஹிலாரிக்கு முன்பு வெளியுறவு மந்திரியாக இருந்த கொண்டலிசா ரைஸ், இந்தியா ரசாயன பொருட்களை கொடுக்கக் கூடாது என்று வற்புறுத்தி உள்ளார். இந்த ஆவணத்தையும் விக்கி லீக்ஸ் வெளியிட்டுள்ளது.

சிரியா ரசாயன ஆயுதங்களை தயாரிக்க முயற்சிப்பதாகக் கருதி அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.




சிரியா, ஈரான், வட கொரியா ஆகிய நாடுகள் நீண்ட தூர ஏவுகணை தயாரித்தது பற்றியும் பென்டகனில் விவாதித்ததாக விக்கி லீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

# பொழுது போக்குத்தான் சினிமா அதை வாழ்க்கையாக்கக்கூடாது



(சென்னை)

பொழுதுபோக்குக்காகத்தான் சினிமாவைப் பார்க்க வேண்டுமே தவிர, சினிமாவை பார்த்து பின்பற்றக்கூடாது என்பதை மாணவ சமுதாயம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என கவிஞர் மு.மேத்தா கூறினார்.

கடலூர் மஞ்சக்குப்பம் புனித வளனார் மேல்நிலைப்பள்ளியில் தமிழ் செம்மொழி இலக்கிய மன்ற விழா நடந்தது. விழாவில் கவிஞர் மு.மேத்தா கலந்து கொண்டு பேசுகையில்,

இந்தப் பள்ளிக்கு வந்ததும் எனது பள்ளிப் பருவ நினைவுகள் தான் கண் முன் ஓடுகின்றன. நான் 35 ஆண்டுகள் கல்லூரிப் பேராசிரியராக பணியாற்றியிருக்கிறேன். எனது வகுப்பில் ஒரு மாணவன் மதியத்துக்கு மேல் வகுப்புக்கு வரமாட்டான். அவன் எங்கே போகிறான்? என்று மாணவர்களிடம் விசாரித்த போது, அவன் மதியத்துக்கு பின் சினிமாவுக்குப் போவதாகச் சொன்னார்கள்.

மறுநாள் காலையில் அந்த மாணவனை அழைத்து விசாரித்தேன். அவன் என்னிடம், ஐயா, தேர்தல் வரப் போகிறது. 18 வயது நிறைவடைந்தவர்களுக்கு வாக்குரிமை கொடுத்து உள்ளனர். எனது ஜனநாயகக் கடமையை சரியாக ஆற்றவேண்டாமா? என்று சொன்னான். அவன் சொன்னது எனக்குக் குழப்பமாக இருந்ததால் தெளிவாகச் சொல் என்றேன்.

அதற்கு அவன், சினிமா பார்த்தால் தானே, அடுத்த முதல்வராக யாரைக் கொண்டு வருவது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். அதனால் தான் எனது ஜனநாயகக் கடமையை ஆற்ற, சரியாக நிறைவேற்ற சினிமாப் பார்க்க போனேன் என்றான்.

அடுத்த முதல்வர் யார்? என்பதை திரைப்படத்தைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், என் தமிழ்ச்சமுதாயமே நீ அழிந்து போய் விட்டாய் என்பது தான் பொருள்.

பொழுதுபோக்குக்காகத்தான் சினிமாவை பார்க்க வேண்டுமே தவிர, சினிமாவை பார்த்து பின்பற்றக்கூடாது என்பதை மாணவ சமுதாயம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு சினிமாவும், தொலைக் காட்சியும் சமுதாயத்தை ஆட்டிப் படைக்கின்றன. இதில் இருந்து தமிழ்ச் சமுதாயம் விடுபட வேண்டும் என்றார்.

# வாக்காளர் அட்டைகள் விநியோகத்தில் ஈடுபடவுள்ளது தேர்தல் திணைக்களம்



(சென்னை)

அரசியல் கட்சிகள் வீடு வீடாக வழங்கி வரும் வாக்காளார் அட்டைகளை, இனிமேல், தேர்தல் திணைக்களமே வீடு வீடாக வழங்கும் என்று தலைமைத் தேர்தல் ஆணையாளர் எஸ்.வை.குரேஷி தெரிவித்தார்.

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுடன் அசாமிலும் சட்டசபைத் தேர்தல் நடைபெறுகிறது. இதையொட்டி, தலைமைத் தேர்தல் ஆணையாளர் எஸ்.வை.குரேஷி மற்றும் 2 தேர்தல் திணைக்களதினர் அசாம் மாநிலத்தில் 2 நாட்களாக முகாமிட்டு தேர்தல் ஏற்பாடுகளை ஆய்வு செய்தனர்.

பின்னர், தலைமைத் தேர்தல் ஆணையாளர் எஸ்.வை.குரேஷி செய்தியாளர்களிடம் பேசுகையில்,

வழக்கமாக, வாக்காளரின் பெயர், எண், வாக்குச்சாவடி ஆகிய விவரங்கள் அடங்கிய வாக்காளார் அட்டைகளை அரசியல் கட்சிகள்தான் வீடு வீடாக வழங்கும். ஆனால், வரும் சட்டசபை தேர்தல்களின்போது, வாக்காளர் அட்டைகளைத் தேர்தல் திணைக்களமே நேரடியாக வாக்காளர்களுக்கு வழங்கப் போகிறது. தேர்தல் ஆணையாளர், வட்டார அளவிலான அதிகாரிகள் (பி.எல்.ஓ.) இந்த வாக்களார் அட்டைகளை வீடு வீடாகச் சென்று வழங்குவார்கள். எனவே, அரசியல் கட்சிகள் இனிமேல் வாக்காளார் அட்டைகளை வழங்க வேண்டியதில்லை.

வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளைக் கண்காணிக்க தேர்தல் ஆணையாளர் கடுமையான விதிமுறைகளை அமுல்படுத்தியுள்ளது. பீகார் சட்டசபை தேர்தலில் இந்த விதிமுறைகள் நன்றாக செயற்பட்டன. எனவே, வரும் 5 மாநில சட்டசபைத் தேர்தல்களிலும் அவற்றை பின்பற்றப் போகிறோம்.

வாக்குச்சாவடிகளில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படும். அதன் மூலம், டில்லியில் இருந்தபடியே, வாக்குசசாவடிகளில் நடப்பதை நாங்கள் அறிய முடியும். அசாம் மாநிலத்தில், ஏப்ரல் 14ஆம் திகதி தொடங்கும் உள்ளூர் பண்டிகைக்கு முன்பாக, தேர்தலை நடத்தி முடிக்குமாறு பெரும்பாலான அரசியல் கட்சிகள் கேட்டுக்கொண்டன. அசாமுடன் தேர்தல் நடைபெறும் 5 மாநில நிலவரங்களையும் நாங்கள் மொத்தமாக ஆய்வு செய்வோம். அதன் அடிப்படையில்தான் தேர்தல் திகதியை முடிவு செய்வோம். தற்போதைய நிலையில், தேர்தல் திகதியை இன்னும் தீர்மானிக்கவில்லை என்றார்.

# எதிர்வரும் தேர்தலுக்கான நாடகமே தமிழக மீனவர்கள் மீதான அக்கறை


## என்கிறார் குணதாச அமரசேகர

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் மீதான மத்திய அரசாங்கத்தின் திடீர் அக்கறையானது தேர்தலுக்கான நாடக அரங்கேற்றமாகும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

இந்த நாடகத்தின் ஓர் அங்கமே நிருபமா ராவின் இலங்கை விஜயம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் தொடருமானால் இலங்கையுடனான உறவுகள் பாதிக்கப்படுமென இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்திருப்பது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே டாக்டர் குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் தேர்தல் இடம்பெறவுள்ளது. எனவே மீண்டும் வெற்றி பெற்று காங்கிரஸ் ஆட்சி அமைக்கப்பட வேண்டுமானால் தமிழகத்தின் வாக்குகள் அவசியமானதாகும். அதற்காகவே "மீனவப் பிரச்சினை' நாடகம் அரங்கேற்றப்படுகிறது. மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பறிப்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிருபமா ராவ் விஜயம் செய்தார். இது போன்ற நாடகங்கள் தொடர்ந்தும் அரங்கேற்றப்படும். எனவே இவை தொடர்பில் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. தேர்தல் முடிந்ததும் இவையனைத்து நாடக அரங்கேற்றங்களும் நின்றுவிடும்.



அதேவேளை, தமிழக மீனவர்கள் இலங்கைப் படையினரால் தாக்கப்பட்டதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை. இது விடுதலைப் புலி ஆதரவாளர்களான வை.கோ போன்றோரால் மேற்கொள்ளப்படும் பொய்ப் பிரசாரங்களாகும் என்றார்.

# அபூர்வ தவளை இனங்கள் இலங்கையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)



இலங்கையில் புதிய தவளை இனங்கள் இரண்டு கண்டு பிடிக்கப்பட்டு உள்ளன. விஞ்ஞானிகளான Madh ava Meegaskumbura, Helum Mana mendraarachchi ஆகியோர் இத்தவளை இனங்களைக் கண்டு பிடித்துள்ளனர்.

இத்தவளை இனங்களுக்கு pseudophilautus schneideri Pseudophilautus hankeni என்று விலங்கியல் பெயர்கள் சூட்டப்பட்டு உள்ளன.

இந்நாட்டில் சாதாரணமாகக் காணப்படக் கூடிய தவளைகளில் இருந்து இவை வேறுபடுகின்றன. உருவத்தில் சிறியவை.

கூர்மையான பார்வை, நீண்ட தொண்டை, குறுகிய முன்னங் கால்கள், கால்களின் வெளிப் புறங்களின் மடிப்பு ஆகியவற்றைக் கொண்டவையாக இவை காணப்படுகின்றன.

# சுகாதார அமைச்சருக்கு கொலை அச்சுறுத்தல்

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிற்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடையாளம் தெரியாத நபர் ஒருவர் தொலைபேசி மூலம் தனக்குப் பலமுறை கொலை அச்சுறுத்தலை விடுத்ததாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் பல்தேசிய மருந்து நிறுவனங்களே இருக்கலாம் என்று அரசாங்க வட்டாரங்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.



குறிப்பிட்ட மருந்துப் பொருட்களின் இறக்குமதிக்கு எதிர்காலத்தில் தடை விதிக்கப் போவதாக சுகாதார அமைச்சர் அறிவித்திருந்தார்.

இதன் விளைவாகவே அவருக்கு இந்த மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# டெங்குநோய்த் தாக்கத்தால் ஜனவரியில் எண்மர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த மாதத்தில் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்கான நிலையில் எண்மர் உயிரிழந்ததுடன் மேலும் 790 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்தது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட டெங்கு நோயாளிகளில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களெனவும் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி கொழும்பு மாநகர சபைப் பகுதிக்குள் 133 பேரும் கொழும்பின் பிறபகுதிகளில் 297 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கம்பஹா மாவட்டத்தில் 96 பேரும் புத்தளம் மாவட்டத்தில் 58 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் மட்டும் 4768 பேர் இந்த நோய்த் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த மாதத்தின் மூன்றாவது வாரம் டெங்கு நோய்த் தடுப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த வாரத்தில் டெங்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென சகல பிராந்திய சுகாதார நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சுத் தெரிவித்தது.

# கிளைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் தமது கிளைகளை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் தனது கிளைகளைத் திறந்துள்ள கூட்டுத் தாபனம், அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் தனது கிளையைத் திறந்துள்ளது. இதன்மூலம், வடமாகாணத்தில் ஆறுகிளைகளைத் திறந்துள்ளது. அதேபோன்று சாவகச்சேரி,மன்னார் மற்றும் செங்கலடி ஆகிய பகுதிகளிலும் தனது கிளைகளைத் திறப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

Sri Lanka Insurance
Corporation Ltd

இவ்வாறு கிளைகளை அமைத்து தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இந்த வருடத்தில் தனது வருமானத்தை 18 பில்லியனாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது. கடந்த வருடம், கூட்டுத்தாபனம் 15 பில்லியனை வருமானமாகப் பெற்றிருந்தமை குறிப்பித்தக்கது.







அண்மையில் கடும் மழைபெய்ததால் இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் கிழக்கு மாகாணத்தில் மீண்டும் பெருமழை பொழியத் தொடங்கியுள்ளது. மழை வெள்ளத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதைக் காணலாம்.

# 90ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் குடியமர மறுப்பு

(கிளிநொச்சி)

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற போரினால் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர மறுத்துள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவது தொடர்பாக அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் அம்மக்களுடன் கலந்துரையாடியுள்ளது. இதன்போதே அம்மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பாக அம்மக்கள் தெரிவிக்கையில்,

கடந்த 20 வருடங்களாக வவுனியா மாவட்டத்தில் தங்கியுள்ளோம். எங்களுடைய வாழ்வாதாரம் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் வவுனியாவில் மேற்கொண்டு வருகின்றறோம். மீண்டும் வன்னியில் வந்து மீளக்குடியேறுவதற்கான சாதகமான சூழல் எங்களுக்கு இல்லை. வவுனியா மாவட்டத்தில் எங்களுக்கு இடத்தை ஒதுக்கி அங்கு எங்களை மீளக்குடியேற்றுங்கள் என்று தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த மக்களை வன்னியில் மீளக்குடியமர்த்துவதற்கு ஜனாதிபதி செயலணி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 228 குடும்பங்களைச் சேர்ந்த 796 பேர் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# சுதந்திர தினத்தில் விசேட நிகழ்வுகள்

(யாழ்.நிருபர்)

இலங்கையின் 63 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்மாவட்டப் பாடசாலைகள் அரச திணைக்களங்களில் விசேட நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

நேற்றையதினம் அரச பாடசாலைகளுக்கு விடுமுறை தினமாக இருந்த போதிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலைகளுக்கு வருகை தந்து இந்நிகழ்வுகளைச் சிறப்பித்திருந்தனர்.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை உட்பட யாழ்நகரில் உள்ள பாடசாலைகள் பலவற்றிலும் காலையில் தேசியகீதம் இசைக்கப்பட்டு தேசியக் கொடி ஏற்றப்பட்டது. சுதந்திரதின உரைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (10)

# பிரிட்டிஷ் தெற்காசியப் பிராந்திய ஆலோசகருடன்

## ஈ.பி.டி.பி - எம்.பி.சந்திரகுமார் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

பிரித்தானியாவின் தெற்காசியப் பிராந்திய ஆலோசகரும் உயர்ஸ்தானியக முதலாவது செயலாளருமான டேவிட் அஷ்லி, அபிவிருத்திக்கும் அரசியலுக்குமான இரண்டாம் தரச் செயலர் டொமினிக் வில்லியம்ஸ் மற்றும் சுவிஸ் தூதரக முதலாம் தர செயலர் சஷ்பா முலர் ஆகியோர் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்களை சந்தித்து கலந்துரையாடினர். யாழ் விஜயத்தை மேற்கொண்டிருந்த பிரிட்டிஷ் மற்றும் சுவிஸ் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களுடன் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியதுடன் வடபகுதி நிலைமைகளையும் கேட்டறிந்தனர். குறிப்பாக யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகள் வடபகுதி மக்களின் மீள்குடியேற்றம், வாழ்க்கைத்தரம் போன்ற விடயங்களைக் கேட்டறிந்தனர்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்கள் யாழ்.குடாநாடு உள்ளிட்ட வடபகுதி நிலைமைகளை எடுத்துக் கூறியதுடன், தற்போது ஏற்பட்டுள்ள ஜனநாயக சூழ்நிலையில் சமாதானம், அபிவிருத்தி அரசியல் தீர்வு என்பன சமகாலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்கூறினார். இதன்பிரகாரம் அபிவிருத்தி நடவடிக்கைகளில் வெளிநாட்டு அரசாங்கங்களினதும் உதவிகள் முதலீடுகள் ஆலோசனைகள் என்பன முக்கியமானதாகும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், வடக்கில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற - முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள், நாட்டு நிலவரங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டன.

இச்சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் இணைப்புச் செயலாளர் ராஜ்குமாரும் உடனிருந்தார்.



மட்டக்களப்பு - செங்கலடிப் பிரதேசத்தில் உள்ள மயானத்திற்கு மேலாக சுமார் 10 அடிக்கு மேல் வெள்ள நீர் கரை புரண்டு பாய்கிறது. இதனால் செங் கலடிப் பிரதேச மக்கள் கொடுவாமடு எனும் மேட்டு நிலப் பகுதியில் நின்று வெள்ளம் பாய்ந்தோடுவதை பார்வையிடுவதைக் காணலாம். ( படம் : ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

## சர்வதேச அரசியல்...

ஒன்று, இது வாழ்வின் உயிமூச்சு" என இந்தியா [illegible] விடுதலை குறித்து மகாத்மா காந்தி தெரிவித்திருந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாம் வாழ்வதற்கான உரிமை, கல்வியை பெறுவதற்கான உரிமைகள் மற்றும் சமூக, அரசியல் ரீதியிலான கருத்துக்களை முன்வைப்பதற்கான வாய்ப்புக்களைப் பெறுவதற்கான எமது உரிமை என்பவற்றையே சுதந்திரம் எனக் கொள்கின்றோம். .சுதந்திரம் இன்றி மக்களால் உயிர்வாழ முடியாது என்பதை நாங்கள் அனுபவ வாயிலாகக் கண்டுள்ளோம். இலங்கையின் சுதந்திர தினமான இன்று நாம் அனைவரும் முழுமையான சுதந்திரத்தினை அனுபவிப்பதை உறுதிப்படுத்துவதோடு சுதந்திரத்தினை நாம் பெற்று மகிழ்வதற்கான சூழமைவினை ஏற்படுத்துவோம்.

1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களுக்கும், எண்பதாம் ஆண்டுகளில் தோன்றிய இனங்களுக்கு இடையிலான வன்முறைகளுக்கும் நாங்கள் வேறு எவரையும் குறைகூற முடியாது. இலங்கையில் அனைத்து இன மக்களையும் சேர்ந்த மக்கள் அனைவரும் நட்புடன் இருக்கும் [illegible] சூழமைவினை உருவாக்கத் தவறிய மாபெரும் தவறு எங்களுடையதுதான்.

போருக்குப் பின்னான இக் காலகட்டத்திலும் சுதந்திரமான, இறையாண்மையுள்ள சமூகத்தினைக் கொண்ட வளம்மிக்க அபிவிருத்திப் பாதையில் இத் தேசத்தினை இட்டுச்செல்லும் வகையில் நாங்கள் பயணிப்பதற்கான சமிக்கைகள் எமக்கு இதுவரை தென்படாதிருப்பது துயரமானது.

இலங்கையின் சிறுபான்மை மக்களின் குரல்வளைகளை ஒடுக்குவது பிரதான அரசியல் செயற்பாடுகளில் இருந்து அவர்களை ஒதுங்குவதற்கு வழி செய்துள்ளது. இத்தகைய நிலைமைகள் நம்பிக்கையீனம் கொண்ட ஒரு சூழல் உருவாகுவதற்கு வழி செய்துள்ளது. இத்தகைய நிலைமை எங்களின் மத்தியில் தெளிவான, நேர்மையான நோக்கம் மற்றும் ஈடுபாடு இல்லாதிருப்பதையே எடுத்துக்காட்டுகிறது.

பெருந்தொகையான படையினர் நிலைப்படுத்தப்பட்டுள்ள வடபகுதி மக்களின் மனங்களில் இன்று எழுந்துள்ள அச்சத்தினைப் போக்க வேண்டியது முக்கியமானது. வடக்கில் தற்போது இடம்பெற்று வரும் படுகொலைகள், கொள்ளைகள் மற்றும் ஆட்கடத் தல்களைக் கட்டுப்படுத்துவற்கான காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் அளிக்கப்பட்டுள்ள சாட்சியங்க ளின் அடிப்படையில் தொடர்புடையவர்கள் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு, துணிவாக வாக்குமூலம் வழங்கிய சாட்சிகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆணைக்குழுவிற்கு இருக்கிறது.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பான நம்பிக்கை இப் பிரதேச மக்களிடம் இல்லை. போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள இம் மக்களின் வாழ்வாதாரத்தினை பெற்றுக் கொடுக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அச்சமற்ற சூழமைவில் இந்த மக்கள் வாழ்வற்கான நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

போரின் போது கொல்லப்பட்ட, காயமடைந்த மற்றும் காணாமற்போன தமிழ் மக்களின் எண்ணிக்கை தொடர்பான உண்மையான விபரங்கள் வெளியிடப்பட வேண்டியது மிகவும் முக்கியமான மனிதாபிமானத் தேவையாகும். குற்றச்சாட்டுக்கள் எதுவும் முன்வைக்கப்படாமல் பல ஆண்டுகளாகச் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளை துரிதப்படுத்த தவறுவதானது சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்கள் மீது அழுத்தத்தினைத் திணித்து, அவர்களின் உளநிலை பாதிக்கப்படுவதற்குமே வழிசெய்யும்.

அச்சம் மற்றும் சந்தேகமற்ற ஒரு சூழலில் மக்கள் வாழ்வதற்கு வழி செய்வதற்குப் பொருத்தமான நிலைமை ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே நாங்கள் பெற்றிருக்கும் இந்த சுதந்திரம் அர்த்தமுள்ளதாக விளங்கும் என குருணாகலை மறைமாவட்ட ஓய்வு பெற்ற ஆயர் அதி வணக்கத்திற்குரிய குமார இலங்கசிங்க இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

## யாழ்.குடாநாட்டிலும்....

அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

இம்முறை வடமாகாண சபை அலுவலகங்களும் யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டதன் காரணமாக வடமாகாணசபை செயலாளர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களும் யாழ்.செயலக சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தேசியக் கொடியை ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

யாழ்.செயலகத்தின் கேட்போர் கூடத்தில் கதிர்காமத்தில் நடைபெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் கலந்து கொண்ட சுதந்திர தின நிகழ்வுகள் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இதனை அரச அதிகாரிகள், ஊழியர்கள் கண்டு கழித்தனர். இந்நிகழ்வில் யாழ்.நகர கட்டளைத்தளபதி அவர்களும் கலந்துகொண்டார்.

இதேவேளை, யாழ்.மாநகரசபையின் சுதந்திர தின நிகழ்வுகள் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், தேசியக் கொடியினை மாநகர முதல்வரும், மாநகர சபைக் கொடியினை மாநகர துணை முதல்வர் இளங்கோவும் (றீகன்) ஏற்றி வைத்தனர். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளில் யாழ்.மாநகர சபை அதிகாரிகள், ஊழியர்கள் முதலானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சமநேரத்தில் ஏனைய அரச அலுவலகங்கள், இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் முதலியவற்றில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெற்றன.

இதேவேளை, சுதந்திர தினத்தை முன்னிட்டு வாகனங்களிலும், யாழ்.நகரின் வீதிகள் தோறும் தேசியக்கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (பா)

## சட்டத்தை மதிக்கும்...

துட்டகைமுனு மன்னன் தாய்நாட்டை ஒன்றிணைக்கும் தனது பயணத்தை இந்த கதிர்காமக் கடவுளின் ஆசியுடன்தான் ஆரம்பித்தான். எமது வரலாற்றில் பல வெற்றிரகரமான சுதந்திரப் போராட்டங்கள் இந்த கதிர்காம கடவுளின் ஆசியுடன்தான் ஆரம்பமாகின. 'அதேபோன்ற ஆசியுடன், முதிர்ச்சியடைந்த ஜனநாயக நாடொன்றின் தலைவர் என்ற வகையில், ஆசியாவின் உயர்ந்த நாடாகும் யுகத்திற்கு உங்களை கொண்டு செல்லும் பொறுப்புடைமையையும் கடமையையும் ஏற்றுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நேற்றுக் கதிகாமத்தில் இடம்பெற்ற சுதந்திர தின் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும்போது,

சுதந்திரத்தை வெற்றி கொள்வது என்பது ஒவ்வொரு நாடும் எதிர் கொண்ட சவாலாகும். அந்த சுதந்திரத்தை பாதுகாப்பது அதை விட பெரிய சவாலாகும். என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கான பேராட்டம் ஒரு காலப்பகுதியில் முடிவடைந்து விடலாம். ஆனால், சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்வதற்கான சவால் எப்போதும் தொடர்ந்திருக்கும். எனவே, ஆர்வத்துடனும் விழிப்புணர்வுடனும், நாட்டின் மீதான பற்றுடனும் பெரும் போராட்டமொன்று தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

எந்தத் தடை வந்தாலும் நாம் இழந்த பொருளாதார அபிவிருத்தி வாய்ப்புக்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு நாம் தாமதிக்க முடியாது. கண்ணிவெடிகள் நிறைந்திருந்த பகுதிகளை இரு வருடங்களுக்குள் நாம் விவசாயம் செய்யக்கூடியதும், அழகியதுமான நிலங்களாக மாற்றியுள்ளோம்.

கல்வி, சுகாதார சேவைகள் முன்னேற்றமடைந்துள்ளன. அரச சேவை பலப்படுத்தப்பட்டுள்ளது. தனியார் துறை வளர்ச்சியடைவதற்குத் தேவையான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பின்மை எப்போதையும்விட மிகக் குறைந்த வீதத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.


இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். அனைத்து பிரதேசங்களிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீதி அபிவிருத்தி தொடரும், அதேபோல் சங்குப்பிட்டி, கிண்ணியா, மன்னம்பிட்டி, மன்னார், கட்டுகஸ்தோட்டை பகுதிகளில் பெரும் பாலங்களையும் கொழும்பின் சுற்றுப்புறங்களில் மேம்பாலங்களையும் நாம் நிர்மாணித்துள்ளோம்.

நாடு முழுவதும் பாரிய வீதி அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து பிரதேசங்களுக்கும் மின்சார வசதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது. மொரகாகந்த, உமா ஓயா, தெதுறு ஓயா, வேரகாஹெல, ரம்புக்கன் ஓயா போன்ற நீர்ப்பாசனத்திட்டங்கள் மூலம் உலர்வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 5 வருடகாலம் அர்த்தபுஷ்டியானது. வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்று பல்கலைக்கழகங்களும் விஸ்தரிக்கப்படடுள்ளன. கதிர்காம கந்தனின் ஆசியுடன் கதிர்காமம் கிரிவிஹாரையில் முதலாவது நெனசெல அறிவகம் ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது அது நாடு முழுவதும் பரவியுள்ளது. 5 வருடங்களில் கணினி அறிவு உயர் மட்டத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மிஹின் லங்கா எனும் புதிய விமான நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. விற்பனை செய்யப்பட்டிருந்த தேசிய விமான நிறுவனம் மீண்டும் மக்களுக்கு சொந்தமாக்கப்பட்டது. காஸ் கம்பனியும் மக்களுக்கு சொந்தமாக்கப்பட்டது. எனவே சுதந்திரத்தின் பின் கடந்த 5 வருடகாலம் மிக அர்த்தபுஷ்டியான காலம் என நாம் பெருமைப்பட முடியும்.

'அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள மக்கள் அடைந்துள்ள வெற்றிகளை எமது மக்களுக்கும் கிடைக்க வேண்டும். எமது இலக்கு வறுமையை ஒழிப்பதாக இருக்க வேண்டும். அதற்கு நாம் வேலை வாய்ப்புகளை விஸ்தரிக்க வேண்டும். மின்சாரம், வீதிகள், தொலைத் தொடர்பு, கல்வி, சுகாதார சேவைகள் போன்ற அபிவிருத்திகள் மூலம் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையிலான இடை வெளி நீக்கப்பட்டால்தான் எமது சுதந்திரம் நீடிக்கும் என்றார்.



# அரசியல் நோயாளிகளுக்கு மத்தியில் மிகுந்த சுகதேகியாக இருக்கிறேன்



(புத்தலை)

வதந்திகளைப் பரப்பும் சேறு பூசும் பிரசாரங்களை மேற்கொள்ளும் அரசியல் நோயாளிகளுக்கு மத்தியில் மிக சுகதேகியாக தான் இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

63 ஆவது சுதந்திர தினத்தையொட்டி புத்தலையில் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை நேற்று மாலை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"புலிகள் மாத்திரமல்லாமல் நாட்டையும் அரசாங்கத்தையும் அழிக்க முனையும் பொய் பிரசாரங்கள் மூலம் பதவிக்காக சில சக்திகள் அரசாங்கத்துக்கு எதிராக சேறு பூசும் பிரசாரங்களை மேற்கொள்வதுடன் பல்வேறு வதந்திகளை பரப்பி வருகின்றனர். இத்தகையவர்களை நான் அரசியல் நோயாளிகள் என்றே கருதுகிறேன். இத்தகைய அரசியல் நோயாளிகளுக்கு மத்தியில் மிகவும் சுகதேகியாக நான் இருக்கிறேன்." என்றார்.





இலங்கையின் 63ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள கைதிகளை விடுவிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் எதிர்பாராதவிதமாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, கைதிகள் உடையில் தோன்றியபோது எடுக்கப்பட்ட படங்களையும், பொன்சேகாவின் மனைவி, பிள்ளை பார்வையிட வருகை தருவதையும் படங்களில் காணலாம்.

# ரகளையில் முடிந்த 'சுதந்திரத்தின் கதறல்'

(கொழும்பு)

சுதந்திர தினத்தை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சியால் நேற்று கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்ட தீப்பந்த ஊர்வலம் பெரும் வன்முறையில் முடிந்துள்ளது.

நேற்றிரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, ரவி கருணாநாயக்க ஆகியோரின் கார்கள் தீவைத்துக் கொளுத்தப் பட்டுள்ளன. மேலும் பல கார்கள் எரிந்துகொண்டிருப்பதாக அப்பகுதியிலிருந்து நேற்று நள்ளிரவு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. பல வாகனங்கள் அடித்து நாசமாக்கப்பட்டுள்ளன.

ஆர்ப்பாட்டக்கரர்கள் வெலிக்கடைச் சிறைச்சாலையை நோக்கி பொரளைப் பகுதியால் சென்றுகொண்டிருந்த போது அப்பகுதிக்கு வந்த இனந்தெரியாத குழு ஒன்று ஆர்ப்பாட்டக்காரர்களை இலக்கு வைத்து சரமாரியான தாக்குதலை நடத்தியதாக அறிவிக்கப்படுகின்றது.



இத்தாக்குதலின் போது வெடி குண்டுகள் பெருமளவுக்கு ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி வீசப்பட்டபோது பலர் படுகாயமடைந்தனர்.

பெருமளவு கற்களும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது வீசப்பட்டதுடன், தடிகள், பொல்லுகள் போன்றவற்றினால் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டனர். புஞ்சிபொரளைப் பகுதி போர்க்களமாகக் காணப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எம்.ரி.வி. நிறுவனத்தின் வீடியோ படப்பிடிப்பாளர்கள் தாக்கப்பட்டு அவர்களுடைய பெறுமதி மிக்க கமராக்களும் தாக்குதலை மேற்கொண்டவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட பத்திரிகைப் புகைப்படப் பிடிப்பாளர்கள் சிலரும் தாக்கப்பட்டு படுகாயமடைந்திருக்கின்றார்கள். இவர்களுடைய கமராக்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் தாக்குதல் நடத்தியவர்களைத் தடுப்பதற்கோ அல்லது அவர்களைக் கைது செய்வதற்கோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

# இரும்பு கடத்திய சிப்பாய் வன்னியில் வைத்து கைது

## இரு வியாபாரிகளும் சிக்கினர்

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின்போது வன்னிப் பிரதேசங்களில் குண்டுகள், எறிகணைகள் போன்றன பட்டு சேதம் அடைந்த வாகனங்களின் இரும்புகளை லொறி ஒன்றில் வைத்து கடத்திச் செல்ல முயன்ற இராணுவச் சிப்பாய் ஒருவரும், வியாபாரி ஒருவரும் விசுவமடு பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.


இந்த இரும்புகளின் பெறுமதி 15 லட்சம் ரூபா வரை தேறும் என்று கைதை மேற்கொண்டவர்களான விசுவமடு பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிப்பாய் லொறியை செலுத்தி வந்திருக்கின்றார். பொலிஸார் சோதனை நடத்த முயன்றபோது எதுவும் லொறியில் இல்லை என்று கூறியிருக்கின்றார்.

பொலிஸார் சந்தேகத்தின் பேரில் லொறியை நிறுத்தி சோதனை செய்தனர். அப்போதே இரும்புகளைக் கண்டு பிடித்தனர்.

அத்துடன் லொறியின் பின் பகுதிக்குள் ஒளிந்து இருந்த இருவரை கையும்மெய்யுமாகப் பிடித்தனர். இருவரும் வியாபாரிகள். இவர்கள் பரந்தன் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

# சுதந்திர தின விழாவில் பிரதமர் பங்குபற்றாதது ஏன்?



(கொழும்பு)

இலங்கையின் 63 ஆவது தேசிய சுதந்திர தினவிழா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கதிர்காமத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பிரதம நீதியரசர் ஜே.ஏ.என். சில்வா, அமைச்சர்கள், பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ, பொலிஸ்மா அதிபர், முப்படைத்தளபதிகள்உட்பட பெரும் எண்ணிக்கையானோர் இவ் விழாவில் பங்குபற்றினர்.

பிரதமர் டி.எம்.ஜயரட்ன இவ்விழாவில் பங்குபற்றவில்லை. உடல்நலக்குறைவே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது. கடந்த வருடம் ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையின் பிரதமராக டி.எம்.ஜயரட்ன பதவியேற்ற பின்னர் நடைபெறும் முதலாவது சுதந்திர தின விழா இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

### கதிர்காமத்தில் நிகழ்ந்த....

நிகழ்வுகள் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

நேற்றுக்காலை சுதந்திர தின விழா நடைபெற்ற திடலுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வருகை தந்தபோது, வருகை தந்த ஜனாதிபதியை, அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டி.ஜே. செனவிரட்ன அவர்கள் கைலாகு கொடுத்து வரவேற்றார்.

மங்கள வாத்தியத்துடன் வரவேற்கப்பட்ட ஜனாதிபதி, பின்னர் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். மாணவர்களால் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. ஜனாதிபதிக்கு முப்படையினரின் மரியாதை அணிவகுப்பு வழங்கப்பட்டதுடன் 21 மரியாதை வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. இது தவிர ஆயிரத்துக்கும் அதிகமான கலைஞர்களும், பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்ட கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து அங்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரலாற்றுச் சிறப்புமிக்க சுதந்திரதின உரையை நிகழ்த்தினார்.

## டீசல் ஒரு லீற்றர் 5 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

நேற்று நள்ளிரவு முதல் டீசல் ஒரு லீற்றரின் விலை 5 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளதாக இலங்கை ஐ.ஓ.சி, நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை, லங்கா ஐ.ஓ.சி. இன் முகாமைத்துவப் பணிப்பாளர் சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில், டிசல் ஒன்றின் புதிய விலை 78 ரூபாவாகும்.

## சிறைச்சாலையில் வெள்ளம் கைதிகள் இடமாற்றம்

(கொழும்பு)

அனுராதபுர சிறைச்சாலையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சுமார் 1,500 கைதிகள் இடமாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

இவர்கள் வாரியபொல, பல்லேகல, போகம்பர, புதிய மெகசின் மற்றும் வெலிக்கட ஆகிய சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

### விலகிச் செல்லும்....

றைக் கடற்படையினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

வலிகாமம் மேற்கின் ஏனைய இடங்களிலிருந்து காரைநகருக்குச் செல்லும்போது எதிர்நோக்க வேண்டிய முன்னணி கடற்படைக் காவலரணாக இதுவரை இந்தக் காவலரண் விளங்கியதுடன், பொன்னாலை கடற்படை முகாமின் பிரதான முன்னணிக் காவலரணாக இந்தக் காவலரண் இருந்து வந்தது. மூளாய் அரசடிச் சந்தியில் சுற்றியிருந்த வீடுகள், கடைகள் என்பவற்றை உள்ளடக்கி இக் காவலரண் அமைக்கப்பட்டிருந்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கடைகள் சிலவற்றை விடுவித்திருந்த கடற்படையினர் தமது இந்தக் காவலரணின் எல்லையைக் குறுகியதாக மாற்றியிருந்தனர்.

பொன்னாலையில் மக்கள் மீள்குடியேற்றப்படுவதற்கு வசதியாக இங்கிருக்கும் கடற்படை முகாம் தற்போது திருவடி நிலைக்கு அண்மையிலுள்ள பௌத்த விகாரைக்கு அண்மித்த பகுதிக்கு இடம்மாற்றப்பட்டு வருகிறது.

இதேநேரம், கடந்த 15 வருடங்களாக யாழ் பருத்தித்துறை வீதியிலிருந்த இராணுவ முகாம் ஒன்று அண்மையில் அகற்றப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### இலங்கையில்.....

நடைபெற்ற இந்த நிகழ்வில், சட்டவிரோத மதுபான உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்து ஒரு வருடத்திற்குட்பட்ட தண்டனை பெற்றவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் அருட்தந்தை எம். சோபன், ஈஸ்வரநாதசர்மா ஆகியோர் முன்னிலையில் விடு தலை செய்யப்பட்டதோடு, அவர்களால் இக்கைதிகளுக்கு அறிவுரைகளும் வழங்கப்பட்டது.

இதேவேளை, நாடு பூராகவும் சுதந்திர தினத்தை முன்னிட்டு 1553 சிறைக்கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மி,பா,52)

### வெளிநாட்டுக்.....

அளவில் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் களுத்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அலுத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


**இடமாற்றம்**

**50, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த**

**ஹரன் ஜுவலர்ஸ் ஸ்தாபனம்**

07.02.2011 முதல் 205, மின்சார நிலைய வீதியில் (பெரிய ஆஸ்பத்திரியின் பின்புறம்) இயங்கும் என்று அன்பர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

T.P: 2226083 (C/427) **நிர்வாகம்**

யாழ்.மாவட்ட மக்களுக்கு

ஷாலோம் SHALOM

உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.

குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...

SHALOM வழங்கும் நற்செய்தி...!

வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்

SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (C/418)

தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

தொலைபேசி : 0217901798 - 0771044861


இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.